# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 23 வெள்ளிக்கிழமை (08-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:12


## இனந்தெரியாத கோஷ்டியினர் அதிகாலையில் கிரனேட் தாக்குதல்!

### பொலன்னறுவையில் நால்வர் பலி!!

கொழும்பு,டிசெ.8

பொலன்னறுவைக்கு கிழக்கே 65 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள குறுளுபெட என்னும் கிராமத்தில் நேற்றுக்காலை 5 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதல்களில நான்கு பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

20 பேர் அடங்கிய கோஷ்டி ஒன்று கிராமத்துக்குள் நுழைந்து இந்த தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு கிரனேட்டுக்கள் வீசப்பட்டன. விஜயரத்தின என்பவரின் வீட்டில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் விஜயரத்தினவும் மற்றும் இரு ஆண்களும் ஒரு பெண்ணும் உயிரிழந்தனர். 17 வயதுடைய இளைஞனும் 15 வயதுடைய இளம் பெண்ணும் காயமடைந்தனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் கிராம எல்லையில் உள்ள காட்டுக்குள் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் -

தாக்குதலை விடுதலைப் புலிகளே நடத்தி இருக்கலாம் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர். (இ-3-8)

### நாடாளுமன்றில் செலூலருக்கு தடை

கொழும்பு,டிசெ.8

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்குள் செலூலர் தொலைபேசி கொண்டுசெல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க இது தொடர்பான அறிவிப்பை நேற்று விடுத்தார். (இ-7)

### மட்டக்களப்பில் சிப்பாய் பலி

மட்டக்களப்பு,டிசெ.8

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## 1250 பயணிகளுடன் இன்று 'லங்கா முடித்த' புறப்பாடு

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு ஆயிரத்து 250 பயணிகளுடன் 'லங்கா முடித்த' கப்பல் இன்று புறப்படவிருப்பதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இந்தக் கப்பலில் செல்வதற்காக பயணச்சீட்டுப் பெற்றவர்களை இன்று காலை 6.30 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் ரயில் நிலையத்தில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பயணிகள் மதிய உணவு, குடிதண்ணீர் ஆகியவற்றையும் கொண்டு வரவேண்டும் என்றும் -

பயணத்துக்கான பதிவுகளை நேற்று மேற்கொண்டு பயணச்சீட்டுப் பெறாதவர்கள் இன்று தமது பயணச் சீட்டுக்களைப் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-139-173)

### மட்டுவில் வடக்கில் தாக்குதல்

மட்டுவில் வடக்கில் உள்ள படையினரின் நிலைகள் மீது நேற்றுமுன்தினம் காலையில் விடுதலைப்புலிகள நடத்திய மோட்டார்த் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் எனவும மூன்று படையினர் காயம் அடைந்தன எனவும் விசேட ஊடகத தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

நாகர்கோயில் பகுதியில் படையினரின் சினைப்பர் தாக்குதலில் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# தீர்வு முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து பிக்குகள் முன்னணி பேரணி நடத்தும்!

## ஏனைய சமயத் தலைவர்களுக்கும் அழைப்பு

கொழும்பு,டிசெம்பர்8

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நோர்வே அரசு முன்னெடுத்துள்ள முயற்சிகளை ஆதரித்தும் - நோர்வேயின் முயற்சிகள் தொடரவேண்டும் என்று கோரியும் - பிக்குகள் முன்னணி எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பில் சமாதான ஊர்வலமொன்றை நடத்த உள்ளது.**

**ஏனைய மதத் தலைவர்களையும் இதற்கு ஆதரவு தரும்படி பிக்குகள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.**

தீவிரவாதச் சிங்களக் கட்சிகள் நோர்வேயின் முயற்சியைக் கண்டித்துப் போராட்டம் நடத்தி வரும் அதே சமயம் -

பிக்குமார் முன்னணி அந்த முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பு மகாவலி நிலையத்தில் ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் நோர்வேத் தூதரகத்தில் முடிவடையும்.

நோர்வேயின் முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் மகஜர் ஒன்று தூதரகத்திடம் கையளிக்கப்படும்.

அதேசமயம் - எதிர்வரும் 12ஆம் திகதி காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கம் நோர்வேயின் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் ஊர்வலம் நடத்தவிருக்கிறது. (இ-3)

## கடந்த கால அனுபவங்களை மிகக் கவனமாக பரிசீலனை செய்த பின்பே புலிகளுடன் பேச்சு

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.8

கடந்த கால அனுபவங்களை மிகக் கவனமாகப் பரிசீலித்த பின்னரே விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சு நடத்தும் -

மேற்கண்டவாறு கூறியுள்ளார் நீதி அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி திட்டமிடல் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

நேற்றுமுன்தினம் ட்ரான்ஸ் - ஏஸியா ஹோட்டலில் ராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சகல கட்சிகளுடனும் அரசு புரிந்துணர்வை பெற்றுக்கொள்வதற்காக ஐ.தே.க. முன்வைத்த பல யோசனைகள் புதிய அரசமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பொலீஸ் சேவை மற்றும் தேர்தல பணிகளை சுயாதீனமாக செயற்படுத்துவது குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாத்துக் கொள்வதற்காக சகல கட்சிகளின் சிவில் அமைப்புகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன - என்றார். (இ-8)

## பரீட்சை எழுதச் சென்ற சிறுமி விபத்தில் மரணம்!

### கடந்த 2 நாள்களில் 5 சம்பவங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

உரும்பிராய், ஆனைக்கோட்டை, கரணவாய்ப் பகுதிகளில் நேற்றும் நேற்றுமுன்தினமும் இடம்பெற்ற 5 வாகன விபத்துக்களில் 13 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்; 9 பேர் காயமடைந்தனர்.

**உரும்பிராயில்**

பலாலியில் இருந்து யாழ்ப்பாணம நோக்கி வந்துகொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்று நேற்றுக்காலை 8.30 மணியளவில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த சிறுமி ஒருவரை மோதியதில் அந்தச் சிறுமி அந்த இடத்திலேயே மண்டை பிளந்து பலியானார். உரும்பிராயில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய 9 ஆம் ஆண்டு மாணவியான விக்கினேஸ்வரன் திவ்யா என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இச்சிறுமியின் சடலம் இரத்தம் தோய்ந்த பாடசாலைச் சீருடையுடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.8

பொதுஅறை விவகாரம் குறித்து எழுந்த சிக்கல்களை அடுத்து கடந்த மூன்று தினங்களாக விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்த யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடம் மற்றும் கலைப்பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் நேற்றுடன் தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பை அடுதது பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முகாமைத்துவ வணிகபீட விரிவுரையாளர்களது பொது அறையை கலைப்பீட மாணவர்கள் பூட்டியதைத் தொடர்ந்து முகாமைத்துவ வணிகபீட விரிவுரையாளர்களும் கலைப்பீட விரிவுரையாளர்களும் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்தது தெரிந்ததே. (இ-7-56)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வாபஸ் பெறக் கோரும் பிரேரணை

### நாடாளுமன்றில் தமிழ்க் காங்கிரஸ் கொண்டு வரும்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வாபஸ் பெற்று சட்ட நூலிலிருந்து அதனை நீக்க வேண்டும் எனக் கோரி யாழ்.மாவட்ட தமிழ்க் காங்கிரஸ் எம்.பி.அப்பாத்துரை விநாயகமூர்த்தி நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றை கொண்டுவர உள்ளார்.

இதற்கான முன்னறிவித்தல் கடிதத்தை நேற்றுமுன்தினம் அவர் சபாநாயகரிடம் கையளித்தார்.

மேற்படி பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் நோக்கத்துடன் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும், தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் எம்.பிக்களுடனும் விநாயகமூர்த்தி பேச்சு நடத்தவுள்ளார் என தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமர குருபரன் தெரிவித்தார்.

தேசியக் கட்சிகளில் அங்கம் வகிக்கும் தமிழ் எம்.பிக்களது நிலைப்பாடு என்ன? என்பது இந்தப் பிரேரணை மூலம் வெளிச்சத்துக்கு வரும் என்று விநாயகமூர்த்தி கூறினார். (இ-8)

## இடைக்கால பட்ஜட் மீது இன்று வாக்கெடுப்பு!

### அரசைத் தோற்கடிக்க ஐ.தே.க. முயற்சி

கொழும்பு,டிசெ.8

இடைக்கால வரவு - செலவுத் திட்டமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்குவாக்கு பணப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று இடம்பெறவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜே.வி.பி., ரெலோ ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் இந்தப் பிரேரணையைத் தோற்கடிக்க ஐ.தே.கட்சி முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் -

அந்தக் கட்சிகளுடன் ஐ.தே.க. பேச்சு நடத்தி வருகின்றது என்றும் - கொழும்பில் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேநேரம் - அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான வாக்கெடுப்பும் இன்று இடம்பெற உள்ளது. (இ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**வெளிவந்து விட்டது**

**G.C.E. O/L 2000**

மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்க்கும் வினாக்களுடன் சகல பாட வினாத்தாள்களும் விடைகளுடன்

கிடைக்குமிடம்:- யாழ்.நகர பிரபல புத்தகசாலைகள்

வெளியீடு :- முன்னோடிப் பரீட்சைகள் நிறுவனம்-இலங்கை (I.P.E)

T.P. No.:- 2578 (81432)



**இதோ!**

## வந்து விட்டன - விற்பனைக்கு

2001 ஆம் ஆண்டுக்கான, கண்கவர் வண்ணப்படங்களுடன் கொம்பியூமென்ற் கலண்டர்கள் விற்பனைக்கு வந்துவிட்டன.

தொடர்பு:-

**பட்டாபி படமாடம்**

இல.64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(C-14188)


முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

## மாணவர் பொது அறை திறப்புவிழா

இடம் : யாழ்.பல்கலைக்கழகம்.

காலம் : இன்று (08-12-2000) வெள்ளிக்கிழமை.

நேரம் : மு.ப 10.30 மணி

மேற்படி நிகழ்வுக்கு அனைத்து மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மாணவர்கள்,*
*முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்.*

(81429)

## பொதுக்கூட்டம்

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று (08-12-2000) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

குறிப்பு:

1ஆம், 2ஆம் வருட மாணவர்களது பரீட்சை சம்பந்தமாக கலந்துரையாடல் நடைபெறும். அனைத்து மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம்.**

(81428)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*மக்களுக்கு அளப்பரிய சேவைகள் ஆற்றிவரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, தமிழ் விவகார இந்து அலுவல்கள் கலாசார அமைச்சருமான*

**K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும்

யாழ்.மாவட்ட அமைப்பாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான

**V.K.குகேந்திரன் (ஜெகன்)** அவர்களையும்

அவர்களோடு நாடாளுமன்றம் செல்லும் உறுப்பினர்களையும் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர்

**திரு.N.திரிலோகநாதன்** அவர்களையும்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

*யா சங்கானை சிவப்பிரகாச ம.வி., சங்கானை.* - பாடசாலைச் சமூகம்.

(81485)

## நன்றியுடன் கூடிய பாராட்டுக்கள்

03.12.2000 அன்று தவறவிடப்பட்ட ஒரு பெறுமதிமிக்க உடைமை *கோப்பாய் மகிந்தின் தொலைத்தொடர்பு உரிமையாளர்*

**திரு.வே.விஸ்வநாதன் அவர்களால்**

கண்டெடுக்கப்பட்டு அவரின் அறிவித்தலின்படி உரியவரினால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இவருடைய இந்த நற்செயலை நன்றியுடன் பாராட்டுகின்றார் சம்பந்தப்பட்டவர். (81416)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் விசேட கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இந்தக் கூட்டம் தொடர்பாக இன்றைய பத்திரிகையின் 6ஆம் பக்கத்தில் வெளியான செய்தியில் மத்தியஸ்தர் என்ற சொல் தவறுதலாக விடுபட்டுவிட்டது.

கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கக் கூட்டமே ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

(இ-3)

## பத்திரிகையாளர்கள் சங்க அவசரக் கூட்டம்

வடமராட்சி,டிசெ.8

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் அவசர கூட்டம் நாளை சனிக்கிழமை யாழ்.கொட்டடியில் சங்கத் தலைவர் சு.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் சங்க உறுப்பினர்களை சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-173)


**புலமைப் பரிசில் 2001**

புதிய பிரிவு
ஞாயிறு (10.12.2000)
பி.ப. 2.00 மணிக்கு
ஆரம்பமாகின்றது.
(30 மாணவர்கள் மட்டும்)

யாழ்நகர்.

**NEW BRIGHT கல்வி நிலையம்**
*(யாள் மாட்டின் வீதி)*

**கல்வியாண்டு - 2001**

- தரம் 4 முதல் O/L வரையான வகுப்புகள்.
- தரம் 5 இற்கான புலமைப் பரிசில் பயிற்சி வகுப்புகள் அனைத்தும்

*ஆரம்பம்: நாளை (09.12.2000)*
சனிக்கிழமை காலை 9மணி.
(வழமையான ஆசிரியர் குழு)
மாணவர்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(81425) - *நிர்வாகி.*

**லஷ்சுமி சினிமா**
இணுவில்
மாதவன், ஷாலினி
நடித்த
2ஆவது வாரமாக
**அலைபாயுதே**
(நீலஸ்) காட்சிகள் 10.30, 2.30 (ப.நே.)
(81372)

**ராஜா யாழ்ப்பாணம்**
3ஆவது கடைசி வாரம்
விஜய், சிம்ரன், மணிவண்ணன்
மற்றும் பலரின் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
*துள்ளாத மனமும் துள்ளும்*
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
11.12.2000 முதல் **வாலி**

**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
விஜய், ஜோதிகா
நடித்த
S.J.சூர்யாவின்
**குஷி**
தினசரி - 11.00, 2.30 (பு.நே.)
(81433)

**YARL HALL கல்வி நிலையம்**

93A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**2001** தரம் 4 முதல் O/L வரை

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | : | திரு.இரா.செல்வவடிவேல் |
| கணிதம் | : | திரு.ச.வாமதேவன் |
| | | திரு.V.ஜெயக்குமார் |
| வர்த்தகம் | : | திரு.A.அகஸ்ரின் |
| தமிழ் | : | திரு.T.முகுந்தன் |
| ஆங்கிலம் | : | திரு.S.R.பேரின்பநாயகம் |
| சமூ. வரலாறு | : | திரு.R.லெபனான் |

புதிய பிரிவு ஆரம்பம்: 09.12.2000சனி காலை 9.00 மணி

Personal Science Class அனுமதி வழங்கப்படுகிறது.

(81347)

**NAVARASAN சித்தன்கேணி**

தரம் 3முதல் 11 வரை

ஆரம்பம்:- 09-12-2000 சனி

| | |
|---|---|
| கணிதம் நவறாசன் | விஞ்ஞானம் சற்குணராஜா |
| தமிழ் கேதீஸ்வரி | சமூகக்கல்வி திருக்குமார் |
| ஆங்கிலம் செபறட்ணம் | சமயம் கோகிலை |
| வர்த்தகம் குமார் | 5ஆம் தரம் புலமைப்பரிசில் கனகசபை |

2001 A/L ACCOUNTS - தவா

(C14192)

**மலிவு விலையில் மகத்தான சேவை**

2001ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள், டயறிகள்,
PRODUCTS OF SILVER SHIELD
SOCKS BANIANS
ELASTIC CURV FORM BRASSIERS
யாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ள

**SRIMURUGAN**
303,K.K.S ROAD, JAFFNA.
T.P. NO: 021-2670, 3588
FAX: 021-3214

(C/14187)


## கண்ணீர் அஞ்சலி



| அவனியில் | அறியாய அழிப்பில் |
|---|---|
| 25 | 07 |
| 09 | 12 |
| 1986 | 2000 |

**செல்வி திவ்யா விக்கினேஸ்வரன்**

(மாணவி - யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

எமது வித்தியாலயத்தில் - தரம் ஒன்பதில் ஒன்றித்த செல்வி திவ்யாவே!

நீர் எங்களைப் பிரிந்து எங்கு சென்றீர்? தீர்க்க ஜீவனாக வாழவேண்டிய திவ்யாவே! திடீரென நீர் மறைவீரென நாம் என்றுமே எண்ணியதில்லை. ஏக புதல்வியாக குடும்பத்தில் உதித்து எல்லோர் இதயங்களிலும் நிறைந்து இன்று உமது பிரிவைத் தாங்காது ஏங்கித் துடிக்கும் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபங்கள்.

-அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சிற்றூழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.*

*வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் உரும்பிராய்.*

(81418)

உதயன்

## இந்தியாவின் சிடுசிடுப்பு!

சர்வதேச பொலிஸ் அமைப்பான ''இன்ரப்போல்'' தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைக் கைது செய்ய உதவுமாறு சர்வதேச ரீதியிலான அறிவிப்பு ஒன்றை விடுத்திருக்கிறது.

இந்தியாவின் உந்துதலினாலேயே இத்தகைய தேடுதல்—கைது—அறிவிப்பு வந்திருக்கும் என அனேகமாக நம்பப்படுகிறது.

அந்நாட்டின் உள்துறை அமைச்சர் அத்வானி புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்து இந்தியா கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை தமது அரசு மேற்கொண்டுவருவதாகப்புதுடில்லி நாடாளுமன்றத்தில் கூறியமை-

ராஜீவ்காந்தி கொலையின் பின்னணிகள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் ஜெயின் கமிஷனின் பல்முனைக் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் கொழும்பு வந்து தடுப்புக் காவலில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் ''நிக்ஸன்'' என்பவரை விசாரித்துச் சென்றமை —

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையை வரவேற்றுக் கருத்து வெளியிட்டதற்காக தமிழகத்தில் அரசியல் தஞ்சம் கோரி பல வருடங்கள் அங்கு வாழ்ந்த தமிழ் உணர்வாளர் ஈழவேந்தன் கொழும்புக்கு நாடு கடத்தப்பட்டமை —

ஆகியவற்றின் தொடர்ச்சியாகவே ''இன்ரப்போல்'' அறிவிப்பும் வந்திருக்கிறது எனலாம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முன்முயற்சிகள் நடைபெற்று வரும் இவ்வேளையில் இந்தியா, அதனைக் குழப்பும் விதத்தில் இவ்வாறு ''பட்டாசுகளை'' வெடிக்கவைப்பது ஏன்?

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு நல்குவதாகக் கூறிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இனப்பிரச்சினை சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் இந்தியாவுடன் கலந்தாலோசிக்கப்படும் என்று கொழும்பு அரசாங்கம் வேறு தெரிவித்திருக்கிறது.

அவ்வாறிருக்க இப்போதைய வேண்டாத விளையாட்டில் ஈடுபட்டு இந்தியா சிடுசிடுப்புக் காட்டுவது ஏன்?

தமிழர் பிரச்சினைத்தீர்வுக்கு இந்தியா உதவும், தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் என்ற கருத்துடைய தமிழ் மக்கள் இந்தியாவின் இப்போதைய நடத்தை குறித்துக் குழப்பம் அடைந்துள்ளனர்; சந்தேகம் கொண்டுள்ளனர். அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளனர்.

தங்கள் சொந்த அரசியலுக்காகவே இந்தியத் தலைவர்கள் இவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்று மேற்படி தரப்பினரில் சிலர் நிலைப்படுத்த முனைந்தபோதிலும்—

இந்தியா உள்நோக்கம் ஒன்றில்லை பலவற்றைத் தன்னகத்தே வைத்தக் கொண்டே இவ்வாறு நடந்து கொள்கிறது என்பதுதான் உண்மை.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையிட விருப்பமில்லை என்று வெளிப்பேச்சுக்குக் கூறிக் கொண்டாலும், தான் அருகிலிருக்க தூர தேசங்கள் யார்?

உத்தியோக பூர்வமாக தன்னை மேவியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இந்து சமுத்திரத்தின் சட்டாம்பிள்ளையாகத் தானே இருக்கவேண்டும்.

இந்தியாவின் இத்தகைய பலவகை மன ஓட்டங்களின் பிரதிபலிப்பே இப்போதைய சிடுசிடுப்பு. தமிழகத் தமிழர்களால் இதனை மாற்ற எதுவும் செய்ய இயலாதே!

# அகந்தை நீங்கி அகவிருள் அகல திருக்கார்த்திகைத் தீபம் ஏற்றுக!

நாளை திருக்கார்த்திகைத் தீப நன்னாள் அதாவது அழகனாகிய முருகப் பெருமானுக்குரிய கார்த்திகைத் திருநாள். கார்த்திகை மாதத்தில் வரும் இந்தத் திருக்கார்த்திகை நட்சத்திரம் மிக விசேடமானது. ஒவ்வொரு மாதத்திலும் கார்த்திகை நட்சத்திரம் வந்தாலும் கார்த்திகையில் வரும் திருக்கார்த்திகைக்கே மகிமை அதிகம் மிக விசேடம் வாய்ந்த ஒரு திருநாள்.

ஈழநாட்டில் புகழ்பெற்றிலங்கும் முருகன் ஆலயங்களில் இந்தத் திருக்கார்த்திகைத் திருநாள் மிக விசேடமாகக் கொண்டாடப்படுகின்றது. இத்தீபத்திருநாள் சர்வாலய தீபம், விஷ்ணுவாலய தீபம், குமாராலய தீபம் என்று வழங்கப்படுகின்றது. ஆகவே குமாராலய தீபம் நாளை சனிக்கிழமை அனுட்டிக்கப்படுகின்றது.

சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்தவர் தான் ஸ்ரீமுருகப் பெருமான். சிவனுக்கும் முருகனுக்கும் பேதமில்லை. இரண்டு பேரும் ஒரே அம்சம். பிரம்ம விட்டுணுக்குள் மமதை தலைக்கேற யார் பெரியவர் என்று அறியாமல் தமக்குள் அடிபட்டுக் கொண்டனர். அதனால் சிவபெருமான் ஒரு சோதி வடிவைத்தோற்றுவித்து—

''பிரம்ம விட்டுணுக்களே! ஏன் வீணே சண்டையிடுகின்றீர்கள்? இந்தச் சோதியின் அடியையும் முடியையும் கண்ணுற்றவர்களே பெரியவர்'' என்று அசரீரியாகக் கூறினார்.

அதைக் கேட்ட பிரமா உடனே ஓர் அன்னப்பறவையாக மாறி முடியைத் தேடிப் புறப்பட்டு விட்டார். விஷ்ணு பன்றியாக உருக்கொண்டு அடியைத் தேடிப் புறப்பட்டார். இருவருமே தோற்றனர். அவர்களால் அடியையும் முடியையும் காண முடியவில்லை.

பிரமா தான் முடியைக் கண்டு விட்டதாகப் பொய் கூறி தாழம் பூவைச் சாட்சியாக்கினார். அதனால் அவருக்கே கோயிலே இல்லாமற் போய் விட்டது. பொய் பேசுவது மகாபாவம் என்று இதனால் அறியலாம்.

> நாளை திருக்கார்த்திகைத் தினமாகும் அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

அவ்வாறு இறைவன் பிரம்ம விட்டுணுக்களின் அகந்தையை அடக்குவதற்காகச் சோதிப் பிழம்பாகத் தோன்றியநாளே இந்தத் திருக்கார்த்திகை இதைச் 'சொக்கப்பாண' என நம்மவர் அழைக்கின்றனர். அதாவது ''சொர்க்கப் பாவனை'' என்பது மருவி நாளடைவில் சொக்கப்பானை என்றாயிற்று.

சைவப் பெருமக்கள் ஒவ்வொருவரும் அனுட்டிக்க வேண்டியது இந்தத் திருக்கார்த்திகை விரதம் கடவுள் ஒளிமயமானவர். அவர் எப்போதும் ஒளிவடிவாக காட்சியளிக்கின்றார். 'அருட்ஜோதி' தெய்வமெனை ஆண்டு கொண்ட தெய்வம்'' என்று வள்ளலாரும் ''ஆதியும் அந்த மும்மில்லா அரும்பெரும் ஜோதி'' என்று மாணிக்கவாசகரும் கூறியிருப்பதை நோக்குதல் தகும். நமது சாதாரண புலனறிவுக்குப் புலப்படாமல் அண்டங்களுக்கு அப்பால், அருட்பெருஞ் சுடராய் நின்று எங்கும் அருள் மயமாகக் காட்சி தரும் ஆண்டவனை ஜோதியாய் வழிபடுகின்றோம் ''தையலார் கொண்டாடும் தொல் கார்த்திகைத் திருநாள்'' என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு—

இருள் துன்பந் தருவது: ஒளி இன்பம் தருவது. ஒளியின்றி உலகமேது? புற இருள் போக்குவது தீப ஒளி. அகவிருள் போக்குவது ஞான ஒளி இருளாகிய துன்பம் நீங்கி அருளாகிய இன்பத்தைப்பெற்றிட நாம் திருக்கார்த்திகை விரதம் அனுட்டிக்க வேண்டும்.

## ஞானக் கதிர்

நீராடி, சுவாமி தரிசனஞ் செய்து, குத்து விளக்கேற்றி, தூபதீபங்காட்டி இறை வழிபாடியற்றி மதியம் ஒருபொழுதுண்டு இவ்விரதத்தை அனுட்டிக்கலாம். அருட் பெருஞ் ஜோதியாக நின்று தனிப் பெருங் கருணையை நல்கிடும் முருகன் இவ்விரதம் அனுட்டிப்போர்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் அருளுவார்.

வாழ்ந்த வாயு நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த இறைவனை ஏத்தி ஏத்தி வழிபாடு செய்ய வேண்டியது நமது தலையாய கடனாகும். இந்த விரதம் அனுட்டித்தால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும் அஷ்டலட்சுமிகளும் அங்கே குடி கொள்வர். பதினாறு பேறுகளும் தப்பாமல் கிடைக்கும். பேய், பிசாசு, பில்லி, சூனியம் ஒன்றும் அணுகாது தீய பிணிகளும் தீய சக்திகளும் விலகி அன்பும் அமைதியும் செல்வமும் சிறப்பும் மலரும்.

எனவே, நம் இல்லங்கள் தோறும் திருவிளக்கேற்றி தீப வழிபாடு செய்து ஒளிவடிவில் இறைவனைக் கண்டு தரிசித்து நம் வாழ்விலும் ஒளி வீசும்படி திருக்கார்த்திகை விரதம் அனுட்டித்து இறைவனின் பேரருட் கருணைக்குப் பாத்திரராவோமாக! ✶

கவிமணி
இராசையா ஸ்ரீதரன்

# மானிலத்தில் மாசில்லாது உற்பவித்த மனுக்குலத்தின் தேவதாய் அமலமரி

அருளப்பு கொர்னேலியஸ்
கொழும்புத்துறை

மரியாள் உலகில் தோன்றுவாள் சர்ப்பத்தின் தலையை நசுக்குவாள். (ஆதி ஆகமம். 3 ஆம் அதிகாரம், 15 ஆம் வசனம்) விசுவாசத்தின் தந்தை எனப்படும் ஆபிரகாம் மகன் ஈசாக்கு, ஈசாக்கின் மகன் யாக்கோபு இவர்கள் வழிவந்து பிறந்தவர் தான் மரியாள். இவளிடம் தான் தூயஆவி நிழலிட சுதனாகிய தேவன் கருத்தரித்துப் பிறந்தார். அதனால் தேவ தாய் என்னும் உன்னத பெயரை அடைந்தாள். இவள் தேவ அன்னையாக இருப்பதால் பலநாமம் சூட்டப்பட்டு அமலஉற்பவ அன்னை என்றும் அழைக்கிறோம். மாசுமறுவற்று உற்பவித்ததால் மாசில்லாக் கன்னியே மாதாவே என்று அவளைப் போற்றி வாழ்த்தி அழைக்கிறோம்.

இவவுடைய இத்திருவிழாவை கடன் திருநாளாக திருச்சபை காலங் காலமாக் அழைத்து வருகிறது. இத்திருநாளில் நாம் செபமாலை ஓதி வாழ்த்துவதுமேலானசிறப்பாகும். செபமாலையைவிசுவாசத்துடன் நம்பிக்கை வைத்து செபிக்கிறவர்கள் அன்னையின் உதவியால் எங்கும் பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள்.

உலகில் பல நாடுகளை நோக்கினால் செபமாலை மாலையின் வரம் பெற்றவர்கள் அநேகர் உண்டு. பிரான்சு தேசத்தில் ஒரு விதவையின் பிள்ளைகள் இருவர் செபமாலைப்பக்தியால் இறைவனின் அருளை அவர்கள் நிறைவாகப் பெற்றார்கள். வேத தாய் அந்தத் தேசத்தில் பெர்னதேத் என்பவவுக்கு காட்சி கொடுத்துள்ளார். கிறிஸ்துமதத்துக்கு எதிராகப் போர் எடுத்த நாடுகளும் உண்டு. அந்தக் காலத்தில் முகமதியர் கிறிஸ்துமதத்தை அழித்து ஒழித்து விட போர்க் கொடி எடுத்து வந்த போதும், சிலுவையுத்தம் நடந்து அப்போது இருந்த பாப்பரசர் தேவ அன்னையின் செபமாலைப்பக்தியை உலகமெங்கும் இருக்கும் கிறிஸ்தவர்களை நம்பிக்கையுடன் செபிக்கும்படி கட்டளையிட்டார் எல்லா நாட்டிலும் உள்ள கிறிஸ்தவர்கள் அந்தக் கட்டளையை ஏற்று செபித்தார்கள். துலுக்கருடைய சண்டை படிப்படியாகக் குறைந்து சிலுவைக் கொடிவென்றதாக வரலாறு உண்டு. தேவ தாய் எங்கெங்கெல்லாம் காட்சிகொடுத்தாரோ அந்த இடமெல்லாம் செபமாலைப பக்தியை விசுவாசத்துடன் சொல்லுங்கள் வரப்போகும் அழிவுகளிலிருந்து காப்பாற்றப்படுவீர்கள் எனக் கூறியுள்ளார்.

தாவீது அரசன் செபமாலைப்பக்தியை நன் இசைத் திறமையால் வாழ்த்தி இறைவனைப் புகழ்தார் என வேதநூல் சொல்லுகிறது. இந்த உலகில் வாழ்ந்து விண்ணில் இருக்கும் புனிதர்கள் செபமாலையைத் தங்கள் கேடயமாகக் கைக்கொண்டு விண்ணக வீட்டின் திறவுகோல்எனப் புகழ்ந்துள்ளனர். பரிசுத்த தந்தை பாப்பரசர் 2 ஆம் அருள் சின்னப்பர் தேவதாயின் செபமாலையின் வல்லமையால் அன்னையின் கடிதத்தின் பெறுபேறுகளை உலகத்துக்கு வெளியிட்டு ஓர் அரக்கனின் கொடிய செயலிலிருந்து உயிர் பாதுகாக்கப்பட்டார்.

செபமாலையின் வரத்தினால் கன்னியர் இல்லம், துறவியர் இல்லங்களில் வாழ்வோர் தூய்மை பெற்று வாழ்ந்ததோடு பாக்கியமான மரணத்தையும அடைகிறார்கள். சில கிறிஸ்தவ குடும்பங்களில் தாய், தந்தை பிள்ளைகள் சேர்ந்து சொல்லப்படும்செபமாலையும் நற்செய்தி வாசிப்பும் அந்த அந்தக் குடும்பங்களில் சமாதானம், மகிழ்ச்சி பெருக வழி வகுக்குகிறது. ஆகவே தேவ அன்னை தந்த இந்த ஆயுதம் உலக நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படவில்லை. விண்ணக நாட்டில் இருந்து தான் இந்த உலகிற்கு தேவதாய் இறக்குமதி செய்து தரப்பட்டது. இந்த ஆயுதம மிகவும் வல்லமையுள்ளது. இந்த ஆயுதத்தில் நமபிக்கை வைத்து அடிக்கடி பாவித்து வந்தால் அதிவிரைவில் எம நாட்டிற்கு நிரந்தர அமைதியும் நீதியான தீர்வும் கிட்டும்.

ஆகவே இந்த யூபிலி ஆண்டில் வேதாகமத்தின் பெட்டகமாக விளங்கும் தேவதாய் எம் எல்லோருக்கும் தந்துள்ள செபமாலை என்னும் ஆயுதத்தைக் கண்டுபாவித்து அதன் பலனை இடைவிடாது அனுபவித்துவர சகல வல்லமை பொருந்திய அமலோற்பவ அன்னையை அவளது அவதார நாளில் வேண்டுவோமாக. ★

## சமய சந்நிதிகளில்

குடாநாட்டில் உள்ள முருகன் ஆலயங்களில்நாளைசனிக்கிழமை திருக்கார்த்திகை திருவிழாவும் குமாராலய தீபம் ஏற்றலும் இடம்பெறும்.

(ம-30)

★ ★ ★

தொண்டமனாறு ஸ்ரீசெல்வச் சந்நிதி முருகன ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

நணபகல் 12 மணிக்கு சுவாமி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

(ம-30)

★ ★ ★

கோணடாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் கோயிலில நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10.30 மணி வரை நா நலம்பெற்றுமக்கள் மனநிம்மதியுடன் வாழவும், நாட்டில ஒற்றுமை, அமைதி, சமாதானம், சுபீட்சம் நிலவ இறை ஆசி வேண்டியும் பஜனை — கூட்டுப் பிரார்த்தனை ஆகியன நடைபெறும்.

(ம-30)

### உதயவாக்கு

சந்தேகம் புகும் வாயில் வழியே அன்பு வெளியேறி விடுகிறது.

— ஷேக்ஸ்பியர்

## நாளை

கார்த்திகை 24
சனிக்கிழமை
திதி திரயோதசி
மாலை: 6.53 வரை.
நட்சத்திரம், பரணி
பிற்பகல் 1.27 வரை.
திருக்கார்த்திகைத்தீபநாள்
சனிப்பிரதோஷ விரதம்
சுபநேரம் 3.19 - 4.49
[illegible] 9.19 - 10.49
பகலுக்கும் இரவுக்கும
பழைய நேரப்படி)

## யாழ். இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை
## பரிசளிப்பு விழா - 1999

இடம்: விசாலாட்சி மண்டபம்
(யாழ். இந்து மகளிர் கல்லூரி)
காலம்: நாளை [09-12-2000] சனிக்கிழமை
முற்பகல் 9.30 மணி (இலங்கை நேரம்)
தலைவர்: திருமதி தனரஞ்சினி துரைசிங்கம்
(அதிபர்)
பிரதம விருந்தினர்:
திரு. குணரட்ணம் சிவபாலன்
(பொறியியலாளர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்)
பரிசில் வழங்கல்:
திருமதி வசந்திமாலா சிவபாலன்
(அதிபர், யா/கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம்),
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(81395)

## கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில்
## இராஜ கோபுரம் அமைப்பதற்கு
தகுதியானவர்களிடம்
## விண்ணப்பங்கள் கோருதல்

மேற்படி ஆலயத்துக்கு ஐந்து தளத்தில் கோபுரம் அமைப்பதற்கு நிறுவனங்களோ அல்லது தனியாரோ தங்களிடம் உள்ள வரைபடம், செலவீன மதிப்பீடுகள் என்பனவற்றை உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம். விவரங்களைப் பரிபாலன சபைத் தலைவரிடம் கிழமை நாள்களில் மாலை 5.00 மணிக்குப் பின்பும் ஞாயிற்றுக் கிழமையில் முழு நேரமும் அறிந்து கொள்ளலாம்.

சு. பரம்சோதி,
தலைவர்

ச. யோகராசா,
பொருளாளர்

பா. வசீகரன்.
செயலாளர்

பரிபாலன சபை,
கோண்டாவில் நெட்டிலிப்பாய்
பிள்ளையார் கோயில்.
(81401)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் விட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
## பாலசுப்பிரமணியம் யோகேஸ்வரி

மலர்வு
14 - 07 - 1954

உதிர்வு
08 - 11 - 2000

பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற அம்மாவே!
உங்கள் முகத்து ஒளியினிலே
நாங்கள் முகம் மலர்ந்து வீற்றிருந்தோம்.
கலகலப்பு வாழ்க்கை எல்லாம்
கனவாய் மறைந்ததே அம்மா!
துன்பசோகத்தில் முகம் வாடி
விழி எல்லாம் நீர் தேங்கி
விம்மலும் விக்கலும் விடையாகி விட்டதே அம்மா!

பிள்ளைகள், தாய்.
சகோதரர்கள், மைத்துனர்.

தற்காலிக முகவரி:
கிறீன் வில்லா,
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

நிரந்தர முகவரி:
தகவல்:
மு. தவரத்தினம்,
அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

(81341)

## வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை, டிசெ. 8
தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஆசிரியர்இசைஞான வித்தகர் திற்றம்பலம் -சிவஞானராஜாவின் 'இன்னிசைநிகழ்ச்சி' பக்கவாத்திய சகிதம்நடைபெறும்.
நண்பகல் 12 30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
(ஜ-30)

## பாராட்டு விழாக்கள்

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டும் வைபவம் நாளை காலை 10 மணிக்குப் பாடசாலை அதிபர் நா. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும்.
(ம-72)

★ ★ ★

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்ற மூன்று மாணவர்களுக்கான பாராட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.
கல்லூரி ஆசிரிய நலன்புரிச் சங்க ஏற்பாட்டில் நடைபெறும் இந்த விழாவில் அதிவிசேட சித்திபெற்ற றோய் நிக்ஷன், அ. அனுராதா, பா. வாசவன் ஆகிய மூன்று மாணவர்களும் தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட உள்ளனர்.
வடமராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் பி அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளார்.
(ம-173)

## பரிசளிப்புவிழாக்கள்

கோப்பாய் நாவலர் வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் கே. வி. குணசேகரம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.
ஆசியுரையை பிரம்மஸ்ரீ த. கந்தராஜேஸ்வரசர்மாவும், அருட்திரு. க. அருள்நேசன் அடிகளாரும் வழங்குவர்
பிரதம விருந்தினர்களாகக் கோப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரமும், ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் டி ஆர். அருமைநாயகமும் கலந்து கொள்வர்.
(ம-72)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 8
வல்வெட்டி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலை விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி. சிவச்செல்வம் தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை நகரபிதா எம் கே. சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராக கரவெட்டி உதவிக் கல்விப் பணிப்பாளர் க அம்பலவாணரும் கலந்து கொள்வர்.
[ம-5]

## வெளிவந்துவிட்டது

வெற்றி பல நல்கும்
விநாயகஷஷ்டி
விரதம்
விரத அனுட்டான
முறைகளோடு
★ விநாயகர் அகவல்
★ விநாயகர் கவசம்
★ பெருங்கதை
(பிள்ளையார் கதை)
ஆகியவையும் அடங்கியது.
தொகுப்பு:
"கோப்பாய்-சிவம்"
(81396)

## அப்போஸ்தல சபை, உடுவில்
## ஆலயக் கட்டடத் திறப்பு விழாவும் பிரதிஷ்டை ஆராதனையும்

இடம்:- அப்போஸ்தலசபை,மானிப்பாய் வீதி, உடுவில்.
காலம்: இன்று (08. 12. 2000) வெள்ளி பி.ப. 3.00 மணி

இதனைத் தொடர்ந்து நாளை சனிக்கிழமை விசேட உபவாச ஜெபக் கூட்டமும், ஞாயிறு ஆராதனையும் நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- சபைப் போதகர்.

(81409)

உரும்பிராய்
ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின்
## மகாசபைக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்

கடந்த 3-12-2000 அன்று ஆலய மண்டபத்தில் மேற்படி கூட்டம்இடம்பெற்ற சமயம் கீழ்க்காணும்போர் புதிய உறுப்பினர்களாகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார்கள்.

தலைவர்:- திரு. இ. நடராசா
பொறியியலாளர்
உப தலைவர்கள்:- திரு. ந. கணேசலிங்கம்
திருமதி பு கனகரத்தினம்
செயலாளர்:- திரு. ச. ஏகாம்பரநாதன் J P
உப செயலாளர்:- திரு. இ தருமலிங்கம்
பொருளாளர்:- திரு. த. செல்லத்துரை

நிர்வாக உறுப்பினர்கள்

1. திரு. இ. கணேசலிங்கம் (சின்னமணி)
2. திரு. க. திருநாவுக்கரசு
3. திரு. பொ. கருணாகரன்
4. திரு. த. தர்மஜெயசூரியர்
5. திரு. இ. இராசதுரை
6. திரு. இ. பஞ்சரத்தினம்
7. திரு. ஐ. சிவபாலசுந்தரம்
8. திரு. இ. பகீரதன்
9. திருமதி நா. தெய்வேந்திரா
10. திருமதி பு. விவேகானந்தன்

இவர்கள் ஆலயத்தைத் திறம்பட பராமரிக்க எல்லாம் வல்ல கற்பக விநாயகர் துணை நிற்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

(81391) உரும்பிராய் வாழ் மக்கள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## தெய்வானையம்மா சிவசுப்பிரமணியம்
(ஞானம்)

தோற்றம்
11 — 02 — 1932

மறைவு
08 — 11 — 2000


அன்போடும் பாசத்தோடும் எங்களை
அரவணைத்து நல்வழிகாட்டி வாழவைத்த
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மாசாந்தி அடைய ஸ்ரீ காமாட்சியை
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், மகன், மகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

ஐ சிவசுப்பிரமணியம்,
123, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.
(81365)

யாழ்ப்பாணம்






வடக்கு மக்களின் அவல வாழ்க்கை நிலையை உலகின் கவனத்துக்குக் கொண்டு வரும் நோக்குடன் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ் வரனும் ஐ.தே.க. எம்.பிக்கள் சிலரும் நேற்றுமுன்தினம் மாட்டுவண்டில்களில் நாடாளுமன்றத்துக்குச் சென்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் வண்டிலைச் செலுத்திச் செல்கிறார். (ஐ)



மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் இருந்து அண்மையில் படையினரால் மீட்கப்பட்ட ஒன்றரை லட்சம் ரூபா பணம் மற்றும் ஒரு தொகுதி தங்க நகைகள் கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

இவற்றை ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைத்த வைபவத்தில் கலந்து கொண்ட 521 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கபில ரத்தினாயக்க மற்றும் ஆலயத் தலைவர் சி.சிவகுரு ஆகியோரையும் ஆலயப் பிரதிநிதிகள் மற்றும் படை அதிகாரிகளையும் படத்தில் காணலாம். (ஐ)




யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினரால் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் இடம்பெற்றது. இப்பரீட்சையில் முதன்மைப் புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கங்களை வென்றெடுத்த மாணவர்களையும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட றோட்டேரியன் வன்னியசிங்கம், றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம், றோட்டேரியன் ஏ.முரளிதரன் ஆகியோரையும் மற்றும் கழக அங்கத்தவர்களையும் படத்தில் காணலாம். (ஐ)

### அரசு-புலிகள் உடன்பாடு காணும் வரை

# யுத்தத்தை நிறுத்தோம் என்று கூற தளபதிக்கு அதிகாரமளித்தது யார்?

## விநாயகமூர்த்தி எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு,டிசெ.8

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று எட்டப்படும் வரை எந்தவிதமான யுத்த நிறுத்தத்துக்கும் இடமில்லை என்று கருத்து வெளியிடும் அதிகாரத்தை இராணுவத்தளபதிக்கு அளித்தது யார்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதத்தடைச்சட்டமும் பொலீஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அதீத அதிகாரங்களை வழங்கியுள்ளன. அவை அரச பயங்கரவாதத்தை அதிகரிக்கவே வழிவகுக்கின்றன. பயங்கரவாதத் தடைச்சட்டம் சட்டப்புத்தகத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும். அவசரகாலச் சட்டம் வாபஸ் பெறப்பட வேண்டும்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகிய நான் இன்று யாழ்ப்பாணம் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டியுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வேயின் சமாதான முயற்சி குறித்து ஜனாதிபதி, பிரதமர், இராணுவத்தளபதி ஆகியோர் ஒருவருக்கொருவர் முரணபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இவர்கள் எல்லோரையும் விட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பிரபாகரன் ஒருபோதும் சமாதானத்துக்கு வரப்போவதில்லை என்றுகூடப் பிரசாரம் செய்துள்ளார்.

இவை எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கையில் நோர்வேயின் முயற்சியில் இலங்கை அரசு நம்பிக்கை கொள்ளவில்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-8)

### சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.8

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளை அனுமதி அட்டை மற்றும் அதன் போட்டோப் பிரதி ஒன்று ஆகியவற்றுடன் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

பரீட்சை மண்டபங்கள் குறித்த அறிவுறுத்தல்கள் இன்று வழங்கப்படவுள்ளதால் அனைத்து மாணவிகளையும் தவறாது சமுகமளிக்கும் படியும் அவர் கேட்டுள்ளார்.

### நேர்முகப் பரீட்சை இன்று இல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று நடைபெறமாட்டாது என்று யாழ். வலயக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நடைபெறவுள்ள திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கூறப்பட்டது. (ம-10)


இணுவில்/மானிப்பாய் வட்டம்/சுன்னாகம்

லயன்ஸ் கழகங்கள் இணைந்து

We Serve

தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான அறநிதிய சபையின்



அனுசரணையுடன் நடத்தும்

வசதியற்ற மாணவருக்கான

இலவச கண் பரிசோதனை முகாம்

காலம்: 10-12-2000 (ஞாயிறு) காலை 8.00 மணி (பு.நே)

இடம்: இணுவில் மத்திய கல்லூரி

கண் பரிசோதனை மேற்கொள்பவர்

யாழ்.போதனா வைத்தியசாலை கண்சத்திர சிகிச்சை நிபுணர்

வைத்திய கலாநிதி S. குகதாசன் அவர்கள்

பார்வை குறைபாடுள்ள வசதியற்ற மாணவர்கள் பாவிக்கத் தேவைப்படும் மூக்குக் கண்ணாடியை **துர்க்கா தேவஸ்தான அறநிதிய சபையினர் பெற்றுத்தரவுள்ளார்கள்.**

**குறிப்பு:** பாடசாலை அதிபர்கள் ஊடாக பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் நேரத்திற்கு முகாமில் சமுகமளிக்க வேண்டும். பதிவு செய்யத்தவறிய தகுதியுடைய மாணவர்களை முன்கூட்டியே தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

*சேவை இணைப்பு:* லயன் S.S. தங்கராஜா
மாவட்டத் தலைவர் - கழக விருத்தி
(இணுவில்/மானிப்பாய் வட்டம்/சுன்னாகம் கழகங்களின் சார்பாக)

*'மருத மகால்',*
*இணுவில் வீதி,*
*மானிப்பாய்.*

(சி14184)


# பிறப்புச் சான்றிதழ்கள் தொடர்பாக சில திணைக்களங்கள் கெடுபிடி

## சுற்றறிக்கையை அசட்டை செய்கின்றனவாம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

பிறப்புச்சான்றிதழ் ஏற்றுக்கொள்ளல் தொடர்பாக சில திணைக்களங்கள் கடைப்பிடிக்கும் நடைமுறைகள் மக்களுக்குப் பெரும் சிரமங்களைக் கொடுப்பதாக முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 26/95 இல் தெளிவாக விளக்கப்பட்டுள்ள போதும் திணைக்களங்கள் அவற்றைக் கடைப்பிடிப்பதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பிறப்புச் சான்றிதழ்களை ஏற்றுக் கொள்வது பற்றி மேலதிக மாவட்டப் பதிவாளரால் முன்பு பத்திரிகைகள் வாயிலாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் சில திணைக்களங்கள் அவற்றைக் கவனத்தில் கொள்ளவில்லையென்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சான்றிதழ்கள் திணைக்களங்களால் ஏற்றுக்கொள்ளப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- பிறப்பைப் பதிவு செய்து பதிவாளரால் வழங்கப்பட்ட பிறப்புப் பதிவேட்டிலிருந்து இலவசமாக வழங்கப்பட்ட பிரதி
- பிறப்புப் பதிவேட்டிலிருந்து பிரதி பண்ணப்பட்ட குறிப்பு
- உத்தேச வயதுச் சான்றிதழ்
- மகவேற்புச் சான்றிதழ்
- பிறப்புப் பதிவேட்டில் சான்றுபடுத்தப்பட்ட பிரதி

எனினும் சில திணைக்களங்கள் இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதில்லை என்று கூறப்படுகிறது. (இ-10)

### உடல் நலக் கல்வி செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.8

கல்வி உயர்கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாகக் கிளையின் அனுசரணையுடன் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆசிரிய மாணவர்களுக்கான உடல் நலக் கல்விச் செயலமர்வும் பயிற்சி முகாமும் எதிர்வரும் 12ஆம்,13ஆம்,14ஆம் திகதிகளில் கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வாண்டு ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறவுள்ள 216 பேர் இதில் பயிற்சியாளர்களாகப் பங்குபற்றவுள்ளனர்.

கலாசாலையின் உடற்கல்வி விரிவுரையாளர் வே.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வின் இணைப்பாளராக கலாசாலையின் விரிவுரையாளர் ஐ.புவனேந்திரன் கடமையாற்ற உள்ளார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முதல் நாள் நிகழ்வை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் மு.பரஞ்சோதியும், இரண்டாம் நாள் நிகழ்வை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த லயன் வை.தியாகராசாவும் ஆரம்பித்து வைப்பர். (ம-10)

# கிரிக்கெட் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ம-5)





## செல்வன் ச.யதுர்சன்

நல்லூர், யமுனா வீதியைச் சேர்ந்த சத்தியசீலன் ~ கேமமாலினி தம்பதியினரின் அருந்தவப் புதல்வன் செல்வன் ச.யதுர்சன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (08~12~2000) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, அன்ரி மற்றும் 6 ஆம் வட்டாரம், குமுழமுனை முள்ளியவளையைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்தி, அத்தை மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் நல்லூர்க் கந்தன் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*40, யமுனா வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

இ.சத்தியசீலன்
(அப்பா)

(81248)


## தென்மராட்சி தரம் 9 மாணவருக்கு!

நெல்லியடி,டிசெ.8

தென்மராட்சிப் பாடசாலைகளில் 2000ஆம் ஆண்டில் தரம் 9இல் கல்வி கற்று, இடம்பெயர்ந்து வேறுபாடசாலைகளில் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் அனைவரும் தங்கள் 2ஆம், 3ஆம் தவணைக் கணிப்பீட்டு புள்ளிகளையும், ஆண்டிறுதி மதிப்பீட்டுப் புள்ளிகளையும், தற்போது கற்கும் பாடசாலை அதிபரிடமிருந்து பெற்று, தமது நிரந்தர பாடசாலை அதிபரிடம் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 10மணிக்குச் சமர்ப்பிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(ம-109)

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

நெல்லியடி,டிசெ.8

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 வயதுச் சிறுவன் ஒருவனை இருவார காலம் விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார்.

சாவகச்சேரியிலிருந்து இடம் பெயர்ந்து வல்வெட்டித்துறையில் வசித்து வந்த தங்கவேல் ஜெயகாந்தன் (வயது 15) என்ற சிறுவனே கடந்த 19ஆம் திகதி வல்வெட்டித்துறை பொலீஸாரினால் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தான்.

குறித்த சந்தேக நபரை காங்கேசன்துறை பயங்கரவாத தடைப் பிரிவு பொலீஸ் அதிகாரி நேற்றுக் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம், இம்மாதம் 19ஆம் திகதி அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-109)

## பெற்றோர் தினம்

அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை பரிசளிப்பு விழாவும் பெற்றோர் தினமும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் செ.பி.இளமுருகனார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் போலும் கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கி காங்கேசன்துறை கிளை முகாமையாளர் என்.சீவரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் அ. விஸ்வநாதன், வலிகாமம் கல்வி வலய கணக்காளர் க.பொன்னுத்துரை, முதன்மை ஆசிரியர் இ.இராமலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (ம-5)


## சேவை நிறைவில் பாராட்டி வாழ்த்துகிறோம்

### உயர்திரு. ஐயாத்துரை சண்முகநாதன்

(உதவிக் கல்விப் பணிப்பாளர் ~ தீவக கல்வி வலயம்)

தெல்லிப்பழை புனிதப் பதி பெற்றெடுத்த

**உயர்திரு. ஐயாத்துரை சண்முகநாதன்** அவர்கள்

கடந்த 30 ஆண்டுகளாக கல்வித் துறைக்கு அரும் பணிகள் ஆற்றி 14.11.2000 அன்று தமது கல்விச் சேவையில் நிறைவு கண்டுள்ளார்.

அவரது அளப்பரிய கல்விப் பணிகளையும், தெய்வீக சமயப் பணிகளையும் இவ் வேளையில் நினைவு கூர்கின்றோம். அவருக்கு எமது உளம் நிறைந்த நன்றி உணர்வுகளையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தீவக கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக அமர்ந்து ஆற்றிய சேவைகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் நலமோடு பல்லாண்டு காலம் வாழ்ந்து சமூகப் பணிகள் ஆற்றிச் சிறக்க வேண்டுமென துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விச் சேவை யாத்திரையில்...........

| | | |
|---|---|---|
| ✵ ஆரம்பக்கல்வி | - | யா/ சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பழை (1950 - 1954) |
| ✵ இடைநிலைக் கல்வி | - | யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை (1955 - 1962) |
| ✵ விவசாய டிப்ளோமா | - | அம்பாறை சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி (1968 - 1970) |
| ✵ ஆசிரிய முதல் நியமனம் | - | யாழ்/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (01.10.1970 -1971) |
| ✵ ஆசிரிய பயிற்சி | - | பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை (01.01.1971 - 31.12.1971) |
| ✵ தொடர் ஆசிரியப் பணி | - | யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி (01.01.1972 - 31.12.1981) |
| ✵ ஆசிரிய ஆலோசகர் | - | வட மாநிலக் கல்வித் திணைக்களம் (1982 - 1986) |
| ✵ ஆசிரிய ஆலோசகர் | - | சாவகச்சேரி, உடுப்பிட்டி, பருத்தித்துறை கல்வி வட்டாரங்கள். (1987 -1989) |
| ✵ ஆசிரிய ஆலோசகர் | - | மருதனார் மடம் கோட்டக் கல்வி அலுவலகம் (1990 - 1993) |
| ✵ விவசாய பாட சிறப்பு அலுவலர் | - | கல்வித் திணைக்களம் வலயம்~1 (1994 - 1998) |
| ✵ உதவிக் கல்விப் பணிப்பாளர் (முறைசாராக் கல்விப் பிரிவு) | - | கல்வித் திணைக்களம், தீவகம். (08.01.1999 - 14.11.2000) |
| ✵ சேவையில் நிறைவு | | ~ 14.11.2000 |

இன்று (8.12.2000) வெள்ளிக்கிழமை தீவகக் கல்வித் திணைக்கள அலுவலகத்தில் அவரது சேவை நிறைவுப் பாராட்டு வைபவம் வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் நடைபெறும்.

வலயக் கல்வித் திணைக்களம்
தீவகம் - வேலணை.

(81317)



## பிரத்தியேக சமஸ்கிருத வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன

ப.சிவானந்தசர்மா B.A (Hons)
(கோப்பாய் - சிவம்)
*கந்தசாமி கோயில் தெற்கு வீதி,*
*இணுவில்.*

(81242)



வடமராட்சியில்

KOTTAIYOOR STUDY CLe

## ஸ்ரடி சேக்கிள்

ஆலங்கட்டை வீதி, கொற்றாவத்தை.

புதிய கல்வியாண்டு 2001 வகுப்புக்கள்

ஆரம்பம் : 09.12.2K சனி பி.ப. 3.30

- தரம் 1 முதல் 11 வரையான வகுப்புக்கள்
- தரம் 5 புலமைப்பரிசில் விசேட வகுப்புகள்
- விசேட கணித வகுப்புக்கள் Gr. 6-11 வரை.

(By - Para)

(81343)



## சேவை நலன் பாராட்டு விழா



யா/கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை அதிபர்

### திரு. வை.சின்னத்தம்பி

அவர்கள் தனது 40 வருட கல்விச் சேவையில் 19 வருட சேவையினை இப்பாடசாலையில் பூர்த்தி செய்து இளைப்பாறுகிறார்.

(81353) இவரை நற்சுகத்துடன் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

*யா/கோண்டாவில்*
*றோ.க.த.க. பாடசாலை.*

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பெற்றார், ஆசிரியர் சங்கம்.



## மறைந்தும் மறையாத மாணிக்கத்தின் பிறந்த நாள் வாழ்த்துடன் 81ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 08 - 12 - 1948



இறப்பு 19 - 09 - 2000

அமரர்

### அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராசா

(ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தரும், U.N.D.P. உத்தியோகத்தரும்)

அவனியில் உதித்த இந்நாளில் இனிய
வாழ்த்துக்கள் சொல்ல நீங்கள் இல்லையே!
உம் பிறந்த நாளைக் கொண்டாட
எம்முடன் நீங்கள் இல்லையே!
பதை பதைக்கும் நெஞ்சோடு பாரினிலே
எம்மைத் தவிக்க விட்டு விண்ணுலகம் சென்றீரோ?
கரம் பிடித்த நாள் முதலாய் எமை வழிகாட்டி
எம் அன்புச் செல்வங்களைச் சிறப்புடன்
வாழ வைத்துப் பாதியிலே பரிதவிக்கச் சென்றீரோ?
நீர் எமை விட்டுப் பிரிந்தாலும் - உங்கள்
அன்பும் பாசமும் எம் வாழ்வில் கலந்த
வண்ணமே என்றென்றும்
வாழ்ந்து கொண்டேயிருப்போம்.
உங்களுடைய ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*2,இராசாவின்தோட்ட ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

உம் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

(81269)

"கல்வியுலகின் கலங்கரைவிளக்கம்"

# நாவலர்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## கல்வியாண்டு - 2001

புதிய வகுப்புகள் ஆரம்பம்: 09-12-2000
(சனி மாலை 3 மணி)

**தரம் 1 முதல் O/L வரை**

- கணிதம்:- திரு.P.ஜெயக்குமார்
- விஞ்ஞானம்:- திரு.P.சிறிஸ்காந்தராஜா
- சமூகக்கல்வி:- திரு.K.S.முத்துலிங்கம்
- தமிழ்:- திரு.W.ஜெயபால்
- ஆங்கிலம்:- திரு.K.ரமணதாசன்
- வர்த்தகம்:- திரு.K.பார்த்தீபன்
- சமயம்:- திரு.S.விஜயன்

குறிப்பு:- *மாதாந்த பயிற்சிப் பரீட்சை நடைபெறும்.
*விஞ்ஞான ஆய்வுகூட வசதி வழங்கப்படும்.
*விரும்பிய பாடங்கள் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

(81380)

ஏழாலை மேற்கு

# கலைமகள் கல்வி நிலையம்

2001ஆம் ஆண்டு புதிய வகுப்புகள் ஆரம்பம்
10-12-2000 ஞாயிறு மு.ப.10.00மணி

ஆண்டு 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. புதிய வகுப்புகளில் சேருபவர்கள் பி.ப.4.00மணிக்கு வருகை தந்து விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆண்டு 11இற்கு குறைந்த மாணவர்களுக்கே வெற்றிடம் உண்டு.

நிர்வாகத்தினர்
கலைமகள் கல்வி நிலையம்
ஏழாலை மேற்கு.

(81370)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் 19,
அத்தியாயம் 252 இன் கீழ்
2001 ஆம் ஆண்டுக்கான
வியாபார உத்தரவுப் பத்திரம் பெறுவதற்கான

## அறிவித்தல்

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் தங்கள் வியாபார நிலையங்களுக்கு 2001ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை எமது சபையில் பெற்று அதனைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 31-12-2000 ஆம் திகதிக்கு முன்னர் சபையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு தங்களுக்கு வியாபார உத்தரவுப் பத்திரம் வழங்கப்படலாம் என சிபார்சு செய்யப்படின் அதற்கான கட்டணத்தை எதிர்வரும் 31-03-2001 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி 2001 ஆம் ஆண்டிற்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் குறித்த நிலையங்களுக்கு கடந்த காலங்களில் உத்தரவுப்பத்திரக் கட்டணம் செலுத்தாதவர்களும் அந்நிலுவைப் பணத்தையும் செலுத்துதல் வேண்டும். இது சம்பந்தமான தொழில் மாற்றங்கள், பெயர் மாற்றங்கள் அத்துடன் நிலுவைகள் சம்பந்தமான பிரச்சினைகள் இருப்பின் மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

31-03-2001ஆம் திகதிக்குப் பின்னர் எமது சபையின் வியாபார உத்தரவுப் பத்திரம் பெறாத எந்தவொரு வியாபார நிலையமும் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது என்பதை அறியத் தருவதுடன் சபையில் பெறும் உத்தரவுப் பத்திரத்தை தங்கள் வியாபார நிலையத்துக்கு முன் பார்வைக்கு வைக்கப்படல் வேண்டும். 2001 ஆம் ஆண்டுக்கு உத்தரவுப் பத்திரம் பெறாது நடத்தப்படும் வியாபார நிலையத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இராசா தணிகாசலம்,
பதில் மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
04-12-2000

(C/14178)

# மீன் பிடியியல் டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா 2ஆம் ஆண்டு மாணவர்களுககான எழுத்துப் பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகி 12ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்தப் பரீட்சையில் முதலாம் அணி மாணவர்களில் கற்கைநெறிகளை பூர்த்தி செய்தும் இதுவரை பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களும், பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களும் தோற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும்-

இந்த மாணவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தம்மிடம் கையளிக்குமாறும் -

மீன்பிடியியல் துறைஇணைப்பாளர் எஸ்.சித்திரவடிவேல் தெரிவித்தார். (ம-6-5-)

# A/L DAY CLASS

5.12.2000 அன்று
சகல பாடங்களும்
ஆரம்பமாகி
நடைபெறுகின்றன.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(81384)

# G.A.Q.,

## 1st IN Com.

யாழ்., பேராதனை
(வெளிவாரி)

- ▲ விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
- ▲ இதற்குரிய பல்கலைக் கழகப் பதிவுகள் எம்மால் செய்து தரப்படும்.
- ▲ விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு :-
S.அருள்நங்கை

## புதிய உயர் கல்லூரி,

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(81385)

# புலமைப்பரிசில்~2001

தரம் 5 மாணவர்களுக்கான
புதிய வகுப்பு
ஆரம்பம்- 09-12-2000
சனி மாலை 3.00 மணி.

வாரத்தில் 6 நாள்கள்.

தூர இட மாணவர்களின் வசதி கருதி சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறும்.

## நாவலர்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(81381)

# UNIVAC

College of
Computer Information
Technology

க.பொ.த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களிற்கு இலவச கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப் புலமைப்பரிசில் 800 Rank ற்கு உட்பட்ட சகல மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

*இதற்கான பதிவுகளை 12.12.2000ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்.*

***K.K.S. Road,***
***Nachchimarkovil,***
***Jaffna.***

(81379)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கத்தின்

# முழு நிலா நாள் நிகழ்வு

நிறுவன ஆதரவில்
தொண்டமானாறு வெளிக்கள நிலையத்துடன்
இணைந்து நடத்தும்

## பாதீனியம் கருத்தரங்கு

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - குமாரசுவாமி மண்டபம்
காலம் : 10.12.2000 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி (புதிய நேரம்)
தலைவர் : திரு.க.சண்முகநாதன்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்;
தலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்)

ஒருங்கிணைப்பாளர் : திரு.க.சி.குகதாசன்
(யாழ். இந்து முன்னாள் அதிபர்; தலைவர், தொண்டமானாறு வெளிக்கள நிலையம்)

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 3.00 - 3.30 | காட்சிப் பொருள்களைப் பார்வையிடல் |
| 3.30 - 3.45 | தலைமையுரை |
| 3.45 - 4.15 | "பாதீனியமும் சூழலும்" திரு.க.சி.குகதாசன் M.Sc. |
| 4.15 - 4.45 | "பாதீனியம் - உருவவியல்" திருமதி ஜெ.நந்தகுமார் M.Phil. (சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்) |
| 4.45 - 5.15 | "பாதீனியமும் விவசாயமும்" திரு.கு.மிகுந்தன் M.Phil. (தலைவர், விவசாய உயிரியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்) |
| 5.15 - 5.45 | கலந்துரையாடல் |
| 5.45 - | நன்றியுரை: நிறைவு |

(நிகழ்வுகள் நேர ஒழுங்கின்படி நடைபெறும்)

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். குடாநாட்டின் விவசாயத்துறை அதிகாரிகளையும் மற்றும் கமக்காரர்களையும் வருகை தருமாறு விநயத்துடன் வேண்டுகின்றோம்.

நன்றி.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

(C/14164)

# MATHS CENTRE

M.M.V. ROAD NELLIADY

- தரம் 4 முதல் தரம் 11 வரை.
- புலமைப் பரிசில் வகுப்பு (திரு. மகாலிங்கசிவம்)
- நடனம் (செல்வி பாமினி)

ஆரம்பம் :- 09.12.2K சனி
3.30 p.m (பி.நே)

(81235)

# SAAHE அழகு நிலையம்

- மணப்பெண் அலங்காரம்
- புகைப்படம் VIDEO
- மண்டபம்
- மணவறை
- கேக் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

தொடர்பு:- 506385
**No. 1, Vaverset Place,**
**Colombo- 6.**

C/14128)

# இதயபூர்வமான அஞ்சலி

கைதடி கிழக்கு, மணியகாரர்வளவைச் சேர்ந்தவரும் திருவருள் மிகு கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில், முதலாய கோயில்களின் ஸ்தாபகப் பரம்பரை உறுப்பினராகவும், நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபையின் உபதலைவராகவும், தற்போது பொருளாளராகவும் இருந்து பணியாற்றியவருமான

## அமரர்

## சின்னத்தம்பி விசுவநாதர் (விசுவலிங்கம்)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்கள் 05-12-2000 அன்று காலை சிவபேறு எய்தினார்.

இப்பெரியாரது தன்னலமற்ற நீண்டகால சேவைகளை இவ்வேளையில் நினைவு கூர்ந்து இவரின் ஆத்மா சாந்தி பெற வேண்டுமென எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகரை இதயபூர்வமாக வேண்டுகின்றோம்.

கைதடி வீரகத்திப் பிள்ளையார்கோயில்
நம்பிக்கைப் பொறுப்பாளர்,
பரிபாலனசபை.

(81368)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய பொமேரியன் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. விலை 3000 ரூபா. தொடர்பு:- பாரத் உணவகம். ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம்சந்தி), யாழ்ப்பாணம். (81375)

## உடன் தேவை

ரியூட்டரிப பாவனைக்கு உகந்த பாவித்த வாங்கு, மேசைகள் மற்றும் கணனி, தமிழ்த் தட்டச்சுப் பொறி, றோணியோ இயந்திரம் முதலியன. தொடர்பு:- வேலணையில் மணி, வங்களாவடிச்சந்தி, யாழ்நகரில் த. தனேந்திரன், இல.83, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி. (81382)

## தவறிவிட்டது

16/1, ஓட்டுமட வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த பேதுறுப்பிள்ளை நவரத்தினம் என்பவருடைய தே.அ.அட்டை(இல. 51061 4062 V), விசேட அ.அட்டை (இல. 0901022197)ஆகிய இரு அடையாள அட்டைகளும், கவருடன் பிரதான வீதிக்கும், K.K.S. வீதி, சிவலிங்கப் புளியடிக்கும் இடையில் (05.12.2000) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில (பிரதானவீதி, யாழ்.) ஒப்படைத்து உதவுமாறு வேண்டுகின்றேன். (81378)

இராசதுரை பிரதீபன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.091300337) அல்லப் பிட்டிக்கும் யாழ். கஸ்தூரியார் வீதி - நாவலர் வீதிக்கும் இடையில் 03.12.2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிறிரூபா நகை மாளிகை,No. 131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கொடுத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (81399)

## திருமண சேவை

கிறிஸ்தவ மதத்தில் மணமக்கள் தேவை. புகைப்படம், யாதகங்களுடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, பிறவுண் றோட் சந்தி, யாழ்ப்பாணம். (81386)

## இறைச்சிக் கோழிகள் தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை தரப்படும். தொடர்பு:- தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர், (81290)

## ENGLISH

இணுவில், மானிப்பாயை அண்டிய பகுதிகளில O/L, A/L, G.A.Q., B.A. மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கிலம் தனியாகவோ, சிறுகுழுக்களாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். கடித மூலம் தொடர்பு:- K. சோமசுந்தரம், புதுமடவடி, சந்தைகிழக்குஒழுங்கை, மானிப்பாய். (81288)

## சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் ஞாயிறன்று ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.காலை 9மணி தொடக்கம் காயத்ரி மந்திர ஜெபம், இலட்ச அர்ச்சனை, பண்ணிசை, பஜனை என்பனவும் வீடியோ படக்காட்சியும் இடம்பெறும். நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும். (ஐ-17)

## தென்மராட்சி மக்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணம், ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்விக் கல்லூரியில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் இக்கலந்துரையாடலில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-15)

## வேலை வாய்ப்பு

போட்டோஸ்ரட் பிரதி எடுக்கும் நிறுவனம் ஒன்றுக்கு அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை. நற்சான்றிதழுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**K.S.M. தொலைத் தொடர்பகம்**
இல. 146, வைரவர் கோயிலடி,
யாழ். பஸ் நிலையம்.

(81390)

---

**BEACON**
வெலிங்டன்சந்தி அருகில்

நாடகமும் அரங்கியலும்
**A/L 2001 DAY CLASS**

ஆசிரியர்:-
திரு.க.ஸ்ரீகந்தவேள்

ஆரம்பம் :- 09-12-2k
(81411) 10.00a.m

---

**யாழ். கல்வி நிலையம்**
மானிப்பாய்வீதி, ஆறுகால்மடம்.

**A/L** 2002 Evening Class / 2001 Day Class

கலை, வர்த்தக வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| TAM. | - | V.M.லிங்கம் |
| H.C. / H.SIM. | } | N.T.தரன் |
| HIS. | - | A.அன்ரன் |
| GEO. | - | S.ஐங்கரன் |
| ACC. | - | N.ரஞ்சித் |
| ECO. | - | J.தயாபரன் |
| COM. | - | S.சிவா |
| LOG. | - | பிரபல்ய ஆசிரியர் |
| I.Q. | { | A.குமாரவேல் / A.அன்ரன் |
| ENG. | - | N.பத்மராஜா |

**தரம் 6 முதல் O/L வரை**

| | | |
|---|---|---|
| கணிதம் | - | C.K.B.தயாளன் / B.டூீபன் |
| விஞ்ஞானம | - | T.டார்வின் / T.விஜயகுமார் |
| ஆங்கிலம் | - | N.பத்மராஜா |
| ச.கல்வி | - | S.ஐங்கரன் / N.சிவா |
| வரலாறு | - | A.அன்ரன் |
| தமிழ் | - | J.தயாபரன் |
| | - | M.ரஞ்சினி |
| சமயம் | - | N.T.தரன் |
| வர்த்தகம் | - | S.சுபநாதன் |

**புலமைப் பரிசில்**

2001ற்கான வகுப்புக்களும் பயிற்சிப் பரீட்சைகளும் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

**சிங்களம்**

By:- லீலா கிருஷ்ணன்
பிரிவு I மாணவர்கள்-10.30 (ப.நே.)
பிரிவு II அலுவலகர்கள்-11.30(ப.நே.)

ஆரம்பம்: 09. 12. 2k
காலை 7.00

(81403)

---

உ
ஓம் கணபதி துணை
அரி ஓம் நமோ நாராயண நமதே

# ஜெயந்தி தின விழாவுக்கு நிதி சேகரிப்பு

அன்புள்ளங்களே!

எதிர்வரும் 17.12.2000 (ஞாயிறு) அன்று இராமகிருஷ்ண பரமஹம்சரின் துணைவியாரும், அன்பே உருவாகியவருமான தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரின் ஜெயந்தி தினமாகும். இத்தினத்தை கைலாசபதி அரங்கில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு இலட்சுமி கடாட்சம் உள்ள நிதிதர விரும்பியோர் கீழ்க்காணும் முகவரியுடன் நேரிலோ, தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளவும்.


**அன்னையின் தொண்டன்,**
**15/10 , இராமநாதன் வீதி,**
**தலையாழி, கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**T.P.2576**

*பிற்குறிப்பு:-*

விளம்பர நோக்குடனோ அல்லது வேறு நிபந்தனைகளுடனோ தரப்படும் பணம் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (C/14183)

---

உ
சிவமயம்



# தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய 1008 சங்காபிஷேக நிகழ்வு - 2000

நிகழும் விக்கிரம வருடம் கார்த்திகை 24 ஆம் நாள் நாளை (09.12.2000) சனிக்கிழமை காலை 7 மணிக்கு
**சங்குபூசை நடைபெறும்.**
பகல் 10 மணிக்கு அபிஷேகம் நடைபெறும்
அதனைத் தொடர்ந்து எம்பெருமானுக்குச்
**சண்முக அர்ச்சனை நடைபெறும்**
பகல் 12 மணிக்கு எம்பெருமான் வீதி உலா வருவார்
உபயம்: பொன்னம்பலம் சிவஞானம் குடும்பம்
அன்று விசேட மேளக்கச்சேரி இடம்பெறும்.

பிரதமகுரு சிவஸ்ரீ ச. கந்தசாமி ஐயர்
உலக குருநாதஐயர் பிரதமகுரு
ஆலய உரிமையாளர், செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு.

(81402)

---

# ஆறாத்துயர் சுமக்கும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 12 - 03 - 1950



ஆண்டவன் அடியில் 08 - 11 - 2000

## திருமதி பராசக்தி சபாநடேசன்

அன்புத் தெய்வமே! ஆருயிர் அம்மாவே!
அகலாது உங்கள் நினைவு எம்முயிர் அடங்கும்வரை
மாறாது உங்கள் உருவம் - மனதில்
மறையாது உங்கள் ஊக்கம்
சீராட்டிப் பாராட்டிக் கல்விதனைத் தந்து
சிறப்புடன் வாழவைத்த குலவிளக்கே!
பார் போற்ற எம்மை வளர்த்த நீங்கள் - அதன்
பயன் தனைப் பாராது விரைந்ததேனோ? - அம்மா
என்றும் உங்கள் நிழலின் கீழ்
எம்மை வழிகாட்டிட வேண்டுகின்றோம்.

எமது பேரன்புமிகு அன்னையின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் எமக்கு உதவிபுரிந்த யாழ்.மருத்துவபீட மாணவர்களுக்கும் கண்ணீரஞ்சலி, மலர்வளையம் சமர்ப்பித்து அஞ்சலி செலுத்திய சக மாணவ, மாணவிகளுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்து, ஆறுதல் கூறியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியையின் போது எமது துயரில் பங்கு கொண்ட விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்
**குடும்பத்தினர்.**


*166, இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.* (81393)

---

உ

# திருமண அழைப்பு

மணமகன் (மிருதங்க வித்துவான்)
**சிரஞ்சீவி பாலச்சந்திர சர்மா**
**Civil Engineer (N.C.T)**
**maths & music Teacher**
**J/Kaladdy M.M.T.M.S.**
**Mirudanga Vidwan R.A.FA,**
**NCO, MS, S.L.B.C.**



மணமகள
**சௌபாக்கியவதி காந்திமதி**
**B.Com. Dip.in. Education**
**(Teacher St/James School Jaffna.)**

மு.ப. 9.49 - 10.49 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் 11.12.2000 திங்கட்கிழமை நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் திருமணத்தில் இணைகின்றனர். இவர்களை குடும்ப சமேதரராக வருகை தந்து ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

**குடும்பத்தினர்.**

திருமதி சதாசிவ ஐயர்
ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

திருமதி
கனகசபாபதிக் குருக்கள்
கோயில் வீதி, நல்லூர்.

(81405)

நூலகம் யாழ்ப்பாணம்

# 'சென்.கிட்ஸ்' வழக்கிலிருந்து நரசிம்மராவ் விடுவிப்பு!



புதுடில்லி, டிசெ.8

'சென். கிட்ஸ்' மோசடி வழக்கில் இருந்து முன்னாள் இந்தியப் பிரதமர் நரம்சிம்மராவ் விடுவிக்கப்பட்டார்.

இந்திய உச்ச நீதிமன்றம் நரசிம்மராவை கடந்த புதன் கிழமை வழக்கில் இருந்து விடுவித்துத் தீர்ப்பளித்தது.

காங்கிரஸில் முக்கிய தலைவராக இருந்த வி. பி. சிங் கட்சியை விட்டு வெளியேறி, காங்கிரசுக்கு எதிரான சக்தியாக மாறியிருந்தார்.

அந்தச் சமயத்தில், சென் கிட்ஸ் என்ற தீவில் இயங்கும் வங்கி ஒன்றில் வி.பி. சிங் கணக்கு வைத்திருப்பதாகவும்—

அவர் சட்ட விரோதமாகச் சம்பாதித்த பணத்தை வைப்பில் இடுவதற்கே அந்தக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டதாகவும்.

காங்கிரஸார் குற்றஞ்சாட்டி வந்தனர்.

பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளில் சென்.கிட்ஸ் தீவில் உள்ள வங்கிக் கணக்கு போலி ஆவணங்கள் மூலம் வி.பி.சிங் பெயரில் வேறு ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இது குறித்து தொடர்ந்து விசாரணை நடத்திய மத்திய புலனாய்வுத் துறையினர், முன்னாள் பிரதமர் நரசிம்மராவ், அரசியல் சாமியார் சந்திரசாமி ஆகியோர் மீது, வி. பி. சிங்கைக் களங்கப்படுத்துவதற்காக போலி ஆவணங்கள் மூலம் வங்கிக் கணக்குகளைத் தொடங்கியதாகக் குற்றஞ்சாட்டி தனி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

தனி நீதிமன்றம் இந்த வழக்கில் இருந்து நரசிம்மராவை விடுவித்ததையடுத்து புலனாய்வுத் துறையினர் மேன்முறையீடு செய்தனர்.

மேன் முறையீட்டை விசாரித்த இந்திய உச்ச நீதிமன்றம் இப்போது நரசிம்மராவை விடுவித்துள்ளது. (ஒ-8)

## நச்சு வாயு பரவியதாகப் பயந்த மக்கள் நடத்திய தாக்குதலில் 22 பேர் படுகாயமடைந்தனர்

கல்கத்தா, டிசெ. 7

தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய வாயு நச்சுத் தன்மையானது என்று நம்பிய பொதுமக்கள் அந்தத் தொழிற்சாலை மீது நடத்திய தாக்குதலில் 8 பொலீஸார் உட்பட 22 பேர் படுகாயமடைந்தனர்.

ஹவுரா மாவட்டத்தின் பொரி இராம் கிராமத்தில் இயங்கி வந்த உணவு பதனிடும் தொழிற்சாலையில் இருந்து நேற்று முன்தினம் மாலை அமோனியா வாயு வெளியேறியது. தொழிற்சாலையின் குளிர்சாதன அறையில் இருந்து வெளியேறிய வாயு கடுமையான நாற்றத்தையும், எரிச்சல் ஏற்படுத்தும் தன்மையையும் கொண்டிருந்தது.

இந்த வாயு கிராமத்துக்குள் பரவியதால் பாதிக்கப்பட்ட மக்கள் நச்சு வாயு வெளியேறியுள்ளதாக எண்ணி அச்சத்தால் வீடுகளை விட்டு தொலை தூரங்களுக்கு தப்பியோடினர்.

வாயுவால் ஏற்பட்ட தாக்கம் மறைந்த பின்னர் நேற்று கிராமத்துக்குத் திரும்பிய மக்கள் கோபத்தில் தொழிற்சாலை மீது தாக்குதல் நடத்தினர்.

இதில் அங்கு காவலுக்கு நின்ற பொலீஸார் உட்பட பலர் காயமடைந்துள்ளனர். (ஒ-8-6)

## ஆங்-சான்-சூகிக்கு அமெரிக்க விருது

வாஷிங்ரன், டிசெ. 8

மியான்மரில் ஜனநாயக அரசை ஏற்படுத்த இராணுவ ஆட்சியாளரை எதிர்த்துப் போராடி வரும் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் —சூகிக்கு சுதந்திரத்துக்கான அமெரிக்க அதிபரின் விருது வழங்கப்பட்டுள்ளது.




சூகி மியான்மரில் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டுள்ளதால், அவரது மகன் அலெக்ஸாண்டர் ஆரிஸ் அதிபர் பில் கிளின்ரனிட மிருந்து விருதுப் பதக்கத்தைப் பெற்றுக்கொள்வார் (3)

## தீவிரவாதச் செயல்களில் ஈடுபடாத ஈழவேந்தனை நாடுகடத்திய செயலுக்கு வீரமணி கண்டனம்

சென்னை, டிசெ. 8

தமிழகத்தில் தங்கியிருந்த ஈழவேந்தனை இலங்கைக்கு நாடுகடத்திய மத்திய அரசின் செயலுக்கு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று வெளியிட்ட அறிக்கையில் இதனை வீரமணி தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக தமிழகத்தில் தங்கியிருந்த ஈழவேந்தன் ஈழமக்களின் துயரங்களை சந்திக்கும் அனைவரிடமும் கூறி ஈழமக்களுக்கு சமாதானத் தீர்வுகிட்ட ஆதரவு வழங்குமாறு கேட்பார்.

நான் அறிய எந்த விதத் தீவிரவாதச் செயல்களிலோ அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளிலோ ஈழவேந்தன் ஈடுபடவில்லை.

அவரை 'விசா முடிந்து விட்டது திரும்பிச் செல்லுங்கள்' என்று திருப்பி அனுப்புவது மனிதாபிமானமற்ற செயல்.

மனிதநேய அடிப்படையிலும் தமிழன் என்ற இன உணர்விலும் மத்திய அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் வீரமணி குறிப்பிட்டுள்ளார். (ஒ-8-6)

## ஐரிஷ் ராணுவத்தின் நிலைப்பாடு

பெல்பாஸ்ட், டிசெ 8

வட அயர்லாந்துச் சமாதான முயற்சிகளுக்குத் தாம் இப்போதும் கட்டுப்பட்டே செயற்படுவதாக ஐரிஷ் குடியரசு ராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

தம்மிடமுள்ள ஆயுதங்கள் பற்றிய பிரச்சினை தீர்க்கப்படுவதே சமாதான முயற்சிகளில் முக்கிய நடவடிக்கை என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வட அயர்லாந்து விடுதலைக்காகப் போராடிவரும் ஐரிஷ் ராணுவத்தின் ஆயுதங்களை தம்மிடம் கையளிக்க வேண்டும் என்று பிரிட்டன் வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. [ஒ-8-6]

## 'மிர்' விண்வெளி நிலையம் விரைவில் விழுத்தப்படும்!

மிர் விண்வெளி ஆய்வுகூடம் பூமியில் விழும் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் 'மிர்' விண்வெளி ஆய்வு கூடத்தின் உபயோக காலம் சென்ற ஆண்டுடன் முடிவடைந்தது. ஆனாலும் மேலும் அதிகப்படியாக இந்த வருடமும் பல விண்வெளி வீரர்கள் 'மிர்' நிலையத்தில் சென்று தங்கி ஆய்வுகளை மேற்கொண்டனர். இந்த வருடத்துடன் 'மிர்' ஆய்வு நிலையத்தைக் கைவிடுவதென ரஷ்யா தீர்மானித்துள்ளது.

உபயோகமற்ற விண்வெளி நிலையங்களையோ, செயற்கைக் கோள்களையோ விண்வெளியில் விட்டுவைத்தால், அவை நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் விண்வெளிச் சாதனங்களின் மோதிச் சேதப்படுத்தும் ஆபத்து உள்ளது.

அதனால் 'மிர்' விண்வெளி நிலையத்தை பசிபிக் சமுத்திரத்தில் விழவைக்கப் போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட காலப் பகுதியில் பசுபிக் சமுத்திரப் பகுதியில் பூமியின் ஈர்ப்பு விசைக்குள் 'மிர்' நிலையத்தைப் பிரவேசிக்க வைக்கும் முயற்சியில் தமது விஞ்ஞானிகள் ஈடுபடத் தொடங்கிவிட்டதாக ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'மிர்' நிலையம் பூமியின் ஈர்ப்பு விசைக்குள் பிரவேசித்துக் கடலை நோக்கி விழும் போதே எரிந்து பல லட்சம் சிறிய துண்டுகளாகச் சிதறிவிடும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் 5 செயற்கைக் கோள்கள் செயலிழந்து பூமியில் விழுந்துள்ளன

78 இல் 'கொஸ்மோஸ்' கனடாவிலும்,

79 இல் 'ஸ்கைலாப்' அவுஸ்திரேலியாவிலும்.

91 இல் 'சல்யூட்- 7' ஆர்ஜென்டினா மற்றும் அத்திலாந்திக் சமுத்திரத்திலும்.

96 இல் 'மார்ஸ்- 96' பசிபிக் சமுத்திரத்திலும்,

இந்த ஆண்டு மே மாதம் 'டொல்டா- 2' தென் ஆபிரிக்காவிலும் விழுந்துள்ளன.


## பதவி வெற்றிடம்

ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் தொலைபேசி இயக்குநர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உடனடியாக விண்ணப்பிக்கவும்.

**தம்பி தொலைத்தொடர்பகம்**

90, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.
(சாந்தி தியேட்டர் முன்பாக)

(81406)

## ஞானோதய அக்கடமி (சாவகச்சேரி)

ஸ்ரீகாந்தா கல்வி நிலையத்தில் (இணுவில்)

**A/L 2001 DAY CLASS**

ஆரம்பம்: 09 - 12 - 2000 - சனி.

12 00 - 1.00 ACC.
1.00 - 2.00 ECO.

2001, 2002 A/L வர்த்தகப் பிரிவு எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

COM — B. பசில்
ECO. — R அன்ரனி
ACC. — K. பார்த்திபன்
I Q. — T. தவசேகர்

(81410)

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய ஆசிரியை செல்வி ஸ்ரீவதனி ஆறுமுகராஜாவின் அன்புத் தந்தையார்

**பொன்னையா ஆறுமுகராஜா**

அவர்கள் காலமானதையிட்டு அதிர்ச்சி அடைவதுடன் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/ ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

(81414)

## யா/ விக்னேஸ்வரக் கல்லூரி

கரவெட்டி

**மாணவர் கௌரவிப்பு**

**க. பொ. த (உ/த) 2000**

ஆசிரியர் நலன்புரிச்சங்க ஏற்பாட்டில் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்ற மாணவர்களைத் தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவித்தல்.

காலம்: நாளை (19-12-2000) சனிக்கிழமை மு. ப. 9-30

தலைவர்:- திரு. க. செல்வராசா (அதிபர்)

பிரதம விருந்தினர்:- திரு. வி. அருளானந்தம்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி வலயம்)

கௌரவம் பெறும் மாணவர்:-

செபஸ்டியன் சூலரட்ணம் றோய் நிக்சன் (கணிதம்)
அம்பலவாணர் அனுராதா (உயிரியல்)
பாலசுப்பிரமணியம் வாசவன் (வணிகம்)

தங்கப்பதக்கம் அன்பளிப்புச் செய்தோர்:

திரு. வ. சிவசூரியகுமாரன்
(தவராஜா) "சரஸ்வதி தொலைத்தொடர்பு நிலையம்" கரவெட்டி மத்தி, கரவெட்டி.

திரு. க. நடராசா
"குளோபல் தொலைத் தொடர்பு நிலையம்" தபால்கந்தோர் முன்பாக, கரவெட்டி.

திரு சி. கணேசலிங்கம்
"தமிழ்ப்பூங்கா அச்சகம்" நெல்லியடி, கரவெட்டி.

குறிப்பு: எமது பாடசாலையிலிருந்து க. பொ. த. உ/த 2000 - பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிச் சங்கம்.

விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.

(ஒ/14186)

### பிரபாவைக் கைது செய்யக் கோரும்

# அத்வானியின் அறிவிப்பு

# இந்துக்களுக்கு அதிர்ச்சி

## இந்து சமயப் பேரவை வாஜ்பாய்க்குக் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி அறிவித்துள்ளமை இலங்கை வாழ் இந்து மக்களிடையே பேரதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

''இலங்கை இனப்பிரச்சினையும் இந்துத் தமிழர்களின் குறைபாடுகளும்'' என்ற தலைப்பில் யாழ். இந்து சமயப் பேரவை இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய்க்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் சாத்தியக் கூறுகள் தென்படும் இந்த அரிய சந்தர்ப்பத்தில் இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக உள்த்துறை அமைச்சர் எல். கே. அத்வானி இந்திய நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இது இலங்கை வாழ் இந்துப் பெரும்பான்மை மக்களுக்கு பேரதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கை இந்துக்கள் இனப்பிரச்சினை காரணமாக கடந்த பல ண்டுகளாக சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றார்கள் என்பதை நாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இன்று நாம் சமாதானத்தையே எதிர்பார்திருக்கின்றோம்.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு இலங்கை அரசும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு ஐக்கியப்பட்டு செயற்படும் அறிகுறி தோன்றும் இச்சந்தர்ப்பத்தில் மேற்படி அறிவிப்பால் இலங்கையிலுள்ள இந்துக்களின் எதிர்கால வாழ்வு இருள் மயமாக்கிவிடும் என்று அஞ்சுகின்றோம். இதனால் பயனடைபவர்கள் இந்தப் பேச்சுவார்த்தையைக் குழப்ப முயற்சிக்கும் பேரினவாதிகள் என்பதை தங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் பாதுகாவலனாக விளங்கும் தங்கள் நாட்டுடன் நீண்டகால சமயம் கலாசார உறவுகளைக் கொண்டிருக்கும் இலங்கை இந்துக்களின் நலனைப் பேண வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை வாழ் இந்துக்களைச் சமாதானமாகவும், கௌரவமாகவும் வாழ வைக்க தங்கள் கைகளில் உள்ள சகல அதிகாரங்களையும் பயன்படுத்தும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகம்மா குணசிங்கம்

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் சோ. குணசிங்கம் அவர்களின் அன்பு மனைவி நாகம்மா மட்டக்களப்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை (9-12-2000) அன்று மட்டக்களப்பில் நடைபெறும்.

தகவல்:
நடராஜா இராஜதேவன்
(மருமகன்)

K. Thirunavukarasu,
9/2, Bunging Lane,
Batticaloa.
T. P. 065-23075

(81434)

### கந்தசாமி பாஸ்கரன்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பாஸ்கரன் நேற்று [7 - 12 - 2000] வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி – புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் இராசமணி ஆகியோரின் மருமகனும் பவளராணியின்(ராணி) அன்புக் கணவரும், சுதாகரன், சுதாஜினி, சுபாஜினி காலஞ்சென்ற சுதர்ஷன் ஆகியோரின் தந்தையும், பிரதீபனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று [8-12-2000] பிற்பகல் 2 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மர. நாகராசா,
(மைத்துனர்]

சங்குவேலி வடக்கு,
நாகதம்பிரான் கோயிலடி,
மானிப்பாய்.

(81407)

### அப்புத்துரை மகேந்திரராஜா

நல்லூர் கடுக்காயடி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட மகேந்திரராஜா 5 - 12 - 2000 அன்று லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை – அரசமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரராஜசேகரம் (உரிமையாளர், சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்) பவளரதம் ஆகியோரின் மருமகனும், நேமிநாதன் (லண்டன்), ஜெயபாபு (லண்டன்), சுகுணதாசன் (லண்டன்), சுகிர்ததாசன் (லண்டன்), திருமகள் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சத்தியபாமா (லண்டன்), அன்னலக்சுமி (லண்டன்), மாலினி (லண்டன்), பார்த்தீபன், குமணதீபன், அபிராமி ஆகியோரின் மைத்துனரும் நிக்கலஸ்நிமலன்(லண்டன்), மெலின்டா (லண்டன்), ரபித்தா (லண்டன்), தஜீதன் (லண்டன்), சங்கீதன் (லண்டன்) ஆகியோரின் பெரிய தந்தையும் ரோமியா, தார்பீகன், பரணிதா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிச் கிரியைகள் (8-12-2000) இன்று வெள்ளிக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
6, கடுக்காயடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்;
P. குமணன் (மைத்துனர்)
(சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்)
நல்லூர்.

(81434)

## கற்பித்தல் உபகரணம் வழங்கும் வைபவம்

வலி. கிழக்கு, டிசெ. 8

வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 12 முன்பள்ளிகளுக்குக் கற்பித்தல் உபகரணங்களை வழங்கும் வைபவம் இன்று வெள்ளி பிற்பகல் 2 மணிக்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெறும். யுனிசெவ் நிறுவனம் இந்த உபகரணங்களை வழங்கியுள்ளது.

(இ-7-180)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ-8

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்றுஇன்று பகல் 12-00 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கலைப்பீட அனைத்து வருட மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார்.

(ம-6)

## பிரார்த்தனை

கொழும்புத்துறை, டிசெ. 8

நாட்டில் சமாதானம் சுபீட்சம் வேண்டி மானிப்பாய் இந்துக் கல்லூரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு விசேட பிரார்த்தனை நடத்தப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இந்தப் பிரார்த்தனையில் சமயத் தலைவர்களும் பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

(இ-7-30)

# இடத்துக்கிடம் மாறுபடும் மண்ணெண்ணெய் விலை

தென்மராட்சி, டிசெ. 8

மண்எண்ணெய் இடத்துக்கிடம் மாறுபட்ட விலையில் ப. நோ. கூ. சங்கங்களில் விற்கப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

நெல்லியடியில் உள்ள சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய இடம்பெயர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடைகளில் ஒரு லீற்றர் மண்எண்ணெய் 21 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறச் சங்கக் கிளைக் கடையில் ஒரு லீற்றர் 22 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. 100 மீற்றர் இடைவெளிகளில் உள்ள இந்தக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் மாறுபட்ட விலைகளில் மண்எண்ணெய் விற்பது குறித்துமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தினால் ஒரு லீற்றர் மண்எண்ணெயின் யாழ்.குடாநாட்டுக்கான விலை 20 ரூபா 45 சதம் ஆகும். கூடுதலான விலையில் மண்எண்ணெய் விற்கப்படுவது தொடர்பாக இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய முகாமையாளர், யாழ். அரச அதிபர்,பளைப் பிரதேச செயலர் ஆகியோருக்கு முகமாலை கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினால் மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

(இ-117)

## நாளை

கொழும்புத்துறை, டிசெ. 8

யாழ். பாலர் கல்விக் கழககத்தின் வருடாந்த கலை நிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமைகாலை 9.30 மணியளவில்யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் கழகத்தின் தலைவர் இ. தவகோபால் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், நாடகமும் இடம்பெறும். (ம — 30)

★ ★ ★

நவாலி, டிசெ. 8

வடக்கு – கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் கிராமிய மட்டத் தலைமைத்துவ தகைமைப் பயிற்சிநெறி நாளை சனிக்கிழமை முதல் 12 ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

[ம-100-135]

## பரீட்சை நிலையம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ 8

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. [சாதாரண] பரீட்சையில் புலோலி மெ. மி. த. க. பாடசாலையில் அமைக்கப்படவிருந்த சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பரீட்சை நிலையம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை—

செம்பியன்பற்று அ.த.க. வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையம் புலோலி மெ.மி.த.க. பாடசாலைக்கும்—

அம்பன் அ. மி. த. க. பாடசாலையில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையம் குடத்தனை அ.த.க. பாடசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [இ-3-7-118]

## அரசாங்க அறிவித்தல்

### பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை

### சுகாதார சேவைகள் யாழ்ப்பாணம்

### இரும்புக்கட்டில்கள், குளிர்சாதனப் பெட்டி (சிங்கர்) வழங்கல்

பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு இரும்புக்கட்டில்கள், சிங்கர் குளிர்சாதனப்பெட்டி வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் என்னால் 13-12-2000 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பி. ப. 2-30 மணிக்கு திறக்கப்படும். இதற்கான கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் மீளளிக்கப்படாத பிணைப்பணமாக ரூபா 100/-உம் மீளளிப்புடனான கேள்விக்கட்டுப்பணமாக ரூபா 5000/-உம் செலுத்தி 8-12-2000 முதல் இப்பணிமனையில் பெற்றுக்கொள்வதுடன் மாதிரிகளையும் (இரும்புக்கட்டில் மட்டும்) பார்வையிடலாம்.

படிவங்கள் 12-12-2000 பி. ப. 3-00 மணிவரை வழங்கப்படும். இக்கேள்விப்பத்திர உறைகள் அரக்கு முத்திரைஇடப்பட்டு இடதுபக்க மேல்மூலையில் ''பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு இரும்புக்கட்டில்கள் குளிர்சாதனப்பெட்டி வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்வித்தாரர் 20-12-2000 திகதிக்கு முன் குறிப்பிட்ட பொருள்களை தாங்களே எமது பணிமனையில் ஒப்படைக்கப்பட வேண்டும். இரும்புக் கட்டில்களுக்கு அன்ரிக்குறோஸ் அடித்து இரு தடவைகள் வர்ணம் பூசுதல் வேண்டும்.

மேலதிக விவரம் தேவைப்படுவோர் பணிமனை நேரத்தில் எமது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்தியகலாநிதி உ. சிவபாதசுந்தரம்
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்--யாழ்ப்பாணம்.

இல. 46, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
7-12-2000

(சி/14193)

# கனத்தை இந்து தகனக்கிரியை மண்டபம் கொழும்பு மாநகர சபையிடம் கையளிப்பு

கொழும்பு,டிசெ.8

கொழும்பு கனத்தை மயானத்தில கொழும்பு வாழ் இந்து சமூகத்தினின சேவைக்காக அமைக்கப்பட்ட தகனக கிரியைகளுக்கான மண்டபத்தை கொழும்பு நகரபிதாவிடம் கையளிக்கும் வைபவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வவிநாயக மூர்த்தி கோயில் முன்னாள் அறங்காவலர் அமரர் எஸ்.ரீ.சின்னத்துரையின் நினைவாக அமைக்கப்பட்ட இந்த மண்டபத்தைக் கையளிக்கும வைபவத்தை கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

சங்கத்தின் தலைவர் சின்னத்துரை தனபாலா இந்த மண்டபத்தை வைபவரீதியாக நகரபிதா ஒமர் காமிலிடம் கையளிப்பார்.

மண்டபத்தை சுற்றி அமைக்கப்பட்டுள்ள வேலியும், நினைவுத் தூபியும் நகரபிதாவிடம் கையளிக்கப்பட இருக்கின்றன.

(உ-3)

SUBRA (14)
சித்தன்கேணி
தரம் 4 முதல் O/L வரை
புதிய கல்வியாண்டு
வகுப்புக்கள் ஆரம்பம்:
நாளை 09.12.2000
மாலை 3.30
விஞ்ஞானம் :
இரா. செல்வவடிவேல்
அவுமதிகளுக்கு முந்துங்கள்
பெற்றோர்களே!
* கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கூடிய ஒரே நிறுவனம்
* மாதாந்த பயிற்சிப் பரீட்சைகள்.
* உயர்ந்த பெறுபேறுகள்
SUBRA விலேயே
தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பு
திரு.கைலநாதன் (81420)

SUBRA (14)
சித்தன்கேணி
(DMI இன் கிளை)
A/L 2001
DAY CLASS
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
கணக்கீடு - D.SAM
வணிகக்கல்வி - B பசில்
பொருளியல் - S.ஜெயகுமார்
அளவையியல - E.S பவன்
தமிழ் - நாக.தமிழிந்திரன்
இந்து நாகரிகம் / இந்து சமயம் } T. ஸ்ரீஸ்
நாடகம் - சந்திரன்
புவியியல - ஐங்கரன்
கிறிஸ்தவம் - அஜந்தா
கணித, விஞ்ஞான பிரிவு
பௌதிகவியல் - திரு.ஜெயம்
திரு.கருணாநிதி
இரசாயனவியல் - திரு.அன்பு
இணைந்த கணிதம் - திரு.தயாசேகா
உயிரியல் - திரு.தயாபரன்
திரு.கஜன்
ஆரம்பம் : நாளை (09.12.2K)
சனி காலை 7.30
(81421)

நாளை ஆரம்பம்
Phy. - க.றமேஸ் B.Sc.
2001 - மின்னியல்
2002 - அலைகள்
Che. - க.பவான் B.Sc.
2001 - பௌதிக இரசாயனம்
2002 - வெப்ப இரசாயனம்.
இணை.கணிதம்: G.ஐங்கரன்B.Sc.
இணை.கணிதம்: - M.ராஜன்
2001, 2002 - காவிகள்
2001 - Day Class
அலகு ரீதியான மீட்டல் வகுப்பு
ஆரம்பம் 09.12.2K 3.00 மணி
THIGAL
K.K.S வீதி, இணுவில்.

ஈசன் கல்வி நிலையம்
கே.கே.எஸ். வீதி -- கோண்டாவில
கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A (Hons)
A/L 2002
சொத்து விற்பனை
SAT. ,SUN. - 4.30pm
ஆரம்பம்:
09-12-2000 4.30pm
தனிப்பாட அனுமதியுண்டு
(81394)

## பாடசாலை சீருடைத் துணி விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

தென்மராட்சி கல்வி வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு 2 ஆம் கட்டமாக சீருடைத் துணி வழங்கப்படவுள்ளது.

பாடசாலைகளுக்கு விநியோகித்து எஞ்சி உள்ள சீருடைத் துணிகளையே இவ்வாறு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சீருடைத் துணிகள் எதிர்வரும் 11ஆம் திகதி மேலதிக மாகாண கல்விப்பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளதால் தென்மராட்சி வலய கல்விப்பணிமனை அதிகாரிகளை அன்றைய தினம் வந்து பெற்றுக்கொள்ளுமாறு மேலதிக மாகாண கல்விப்பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் பூ.புலேந்திரன் தெரிவித்தார். (ம-6)

## சமுர்த்தி நிரந்தர நியமனக் கடிதம்

காரைநகர்,டிசெ.8

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தியாளர்களுக்கான நிரந்தர நியமனக்கடிதங்கள் வழங்கும் வைபவம் இன்று வெள்ளி காலை 9 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில நடைபெறும்.

ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜேஎக்ஸ்செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் 19 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனத்துக்கான கடிதங்களை பெற்றுக்கொள்வர். (இ-7-73)

## நாளை நடப்பவை

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை முதன்மைநிலை ஒன்றின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முதன்நிலை விரிவுரையாளரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளருமான எஸ்.பி.வி.இராஜேஸ்வரன் கலந்துகொள்வார். திருமதி கௌரி இராஜேஸ்வரன் பரிசில்கள் வழங்குவார்.

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் திரைப்படக் காட்சித் தொடரில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு மேலைத்தேய சாஸ்திரிய சங்கீதம் தொடர்பான முதலாவது திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

மிலோஸ் போர்மனின் அமாடியஸ் (Amadeus) என்னும் திரைப்படமே திரையிடப்படவுள்ளதாகவும் இதில் ஆர்வமுள்ள அனைவரும் வந்து பயன பெறலாம் என்றும் புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

(இ-6)

SUBRA (14)
சித்தன்கேணி
வெளிவாரிப்பட்டப்படிப்புப் பிரிவு (யாழ்., பேராதனை)
G.A.Q, B.A - PART - I
B.A - PART - II
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
* புதிய பிரிவுகள் ஆரம்பம்:
09-12-2K காலை 7.30
* பதிவுகள் எம்மால் செய்து தரப்படும்
* அலுவலர்கள், ஆசிரியர்களுக்கு பிரத்தியேக முறையில் வகுப்புக்கள்.
(81422)

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
2001 A/L DAY
ஆரம்பம் 09.12.2K ந.ப. 12.00
கலை, வர்த்தகம்
Eco. - வரதராஜன்
Com. - பசில்
Acc. - பாலா
Log. - S.S மனோகரன்
Tam. - நாக. தமிழிந்திரன்
I.Q. - தவசேகர்
Sta. - பிரபல ஆசிரியர்.
H.C. - பத்மராஜா
Note :* அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
* கணக்கீடு வாரத்தில் 5 நாள்கள்
(81430)

# இந்த ஆண்டு சம்பந்தன் விருது பண்டிதர் சச்சிதானந்தனுக்கு

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக வழங்கப்படும் சம்பந்தன் விருது இந்த ஆண்டு பண்டிதர் க.சச்சிதானந்தனுக்கு வழங்கப்படுகின்றது.

இலங்கையின் மூத்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவரான அமரர் சம்பந்தனின் சார்பில் அவரது உறவினர்களால் "சம்பந்தன் விருது" ஒவ்வொரு ஆண்டும் பண்டிதமணி நினைவாக வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் பண்டிதர் க.சச்சிதானந்தன் எழுதிய 'யாழ்ப்பாண காவியம் என்ற நூல் 1999ஆம் ஆண்டின் மிகச் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டு இந்த ஆண்டுக்கான விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

விருது வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்பு ஆய்வுபீட மண்டபத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பண்டிதமணி நினைவுரையை ஆசிரியமணி அ.பஞ்சாட்சரமும் விருதுரையை மூதறிஞர் சொக்கனும் வழங்குவர். ஏற்புரையை பண்டிதர் க.சச்சிதானந்தன் நிகழ்த்துவார்.

# கிரிக்கெட் அணி இன்று திருமலைக்கு

யாழ்மாவட்ட பாடசாலைகளின்-15 வயதுக்குட்பட்ட - கிரிக்கெட் அணி இன்று திருகோணமலைக்குப் புறப்படவிருக்கின்றது.

இந்த அணி திருகோணமலை, மட்டக்களப்பு அணிகளுடன் இரு போட்டிகளில் பங்குபற்றும்.

யாழ்.அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களின் விவரம் வருமாறு:-

வி.ரஜீவ்குமார் (அணித்தலைவர்- யாழ்.மத்திய கல்லூரி), ஸி.மதுஷன் (உதவி அணித் தலைவர் - கொக்குவில் இந்து), ஜி.செல்வன் லொயிட் (சென்.பற்றிக்ஸ்), எம்.விஷ்ணுகாந்த் (யாழ்.இந்து), கே.ரொஹரான் (யாழ். மத்திய கல்லூரி), வி.சத்தியபிரசன்னா (ஸ்ரான்லி), ரி.கிறிஸ்ரி அன்ரு (சென். ஜோன்ஸ்), ஜே.ராஜ்குமார் (மானிப்பாய் இந்து), வி.கரஞ்சீவ் (யாழ். இந்து), ஆர்.மதுஷன் (யாழ்.மத்திய கல்லூரி), ஈ.ஐங்கரன் (கொக்குவில் இந்து), எஸ்.போல்டன் கெஸ்ரன் (சென்.பற்றிக்ஸ்), எஸ்.பபிதரன் (யாழ். இந்து), ரி.மதனராஜ் (சென்.ஜோன்ஸ்), கே.கிருஷ்ணசந்திரா (ஸ்கந்தா), ஏ.பிரசாந்தன் (கொக்குவில் இந்து)

அணி முகாமையாளராக சண். தயாளனும், பயிற்றுனராக கே.சண்முகலிங்கமும், அணிப் பொறுப்பாளராக எஸ்.உமாசுதனும அணியுடன் செல்கின்றனர்.

(இ-8)

எடிசன் அக்கடமி
411, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
18, வைமன் றோட், நல்லூர்.
கல்வியாண்டு 2001
தரம் 6 முதல் O/L வரை
வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்: நாளை (09.12.2000) சனிக்கிழமை
யாழ். எடிசன் : காலை 8மணி
நல்லூர் எடிசன் : மதியம் 12 மணி

## வாழ்த்துகின்றோம்

கிளி/முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலயத்தில் கணிதத் துறையில் மாபெரும் சாதனை

| | | மாவட்டநிலை | தேசிய நிலை |
|---|---|---|---|
| அ. உமாசுதன் | 3A | 01 | 116 |
| சி. நிரோஜன் | 3A | 02 | 149 |
| சு. டெனிசேவியர் | 3A | 03 | 154 |

இச்சாதனைக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களையும் பரீட்சையில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள் சார்பில்
*வாழ்த்துபவர்:* சிவலிங்கம் செல்வகரன்

(81439)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்

**K. விக்கினேஸ்வரன்**

அவர்களின் மகள்

**செல்வி திவ்யா**

(யா/வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்- ஆண்டு - 9)

செல்வியின் சொல்லொணா துயர்கேட்டு உள நெகிழ்வுகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள், யாழ்.சாலை

(81436)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசசிவகுமார் பரமேஸ்வரி

ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசசிவகுமார் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (07.12.2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அழகரத்தினம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், இராசசிவகுமாரின் அன்பு மனைவியும், ஜெயந்தனின் தாயாரும், கார்த்திகாவின் மாமியாரும், புவனேஸ்வரி, கருணாமூர்த்தி, யோகராஜா (ஜேர்மனி), மகேந்திரராஜா (சுவிஸ்), தேவராஜா (சுவிஸ்), இரத்தினேஸ்வரி, லிங்கேஸ்வரி, (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2000) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று 5.00 மணியளவில் கல்லுண்டாய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
அ.கருணாமூர்த்தி
(சகோதரன்)

*மூத்தவிநாயகர் கோயிலடி,*
*ஆனைக்கோட்டை.* (81440)

## பாராட்டுகின்றேன்

கிளி / முரசுமோட்டை முருகானந்த மகா வித்தியாலயம்

2000ஆம் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களையும் சிறந்த பெறுபேறு எடுத்த மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

| | | மாவட்ட நிலை | தேசிய நிலை |
|---|---|---|---|
| அ. உமாசுதன் | 3A | 01 | 116 |
| சி. நிரோஜன் | 3A | 02 | 149 |
| சு. டெனி சேவியர் | 3A | 03 | 154 |

திரு. திருமதி முருகையா
(முன்னாள் ஆசிரியர்கள்)

(81438)

## மாவை கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயில் சிவன் கோயில் கார்த்திகை தீப உற்சவம்

10.12.2000 ஞாயிற்றுக்கிழமை தீப உற்சவம் நடைபெறும். 25பேர் மட்டும் ஆலய வழிபாடு செய்ய காங்கேசன்துறை கட்டளைத் தளபதி அனுமதியளித்துள்ளார். காலை 10 மணிக்கு முன் தெல்லிப்பழை தடை முகாமுக்கு வரவும். முன்புவரும் 25 பேர் மட்டுமே அழைத்துச் செல்லப்படுவர்.

-அறங்காவலர்.

(81437)

## உளவியல் துணையாளருக்கான பயிற்சிப் பாசறை

நெதர்லாந்து நாட்டைச் சார்ந்த பேராசிரியர் **Guss Van de Veer** எமது பிரதேசத்தின் நன்மை கருதி, உளவளத் துணையில் பயிற்சி பெற்றவர்களுக்கும் பயிற்சி பெறுபவர்களுக்குமான பயிற்சிப் பாசறையை நடத்த முன்வந்துள்ளார்கள்.

எனவே அவரிடம் பயிற்சி பெற விரும்புவோர் அவரைத் தவறாது சந்தித்து பயன்பெறுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

**சந்திக்கும் நேரங்கள்** - வெள்ளிக்கிழமை (08.12.2000) மாலை 2.00 - 4.00
- சனிக்கிழமை (09.12.2000) காலை 9.00 - மாலை 4.00 வரை

**சந்திக்கும் இடம்** : இணுவில் மக்கிளியாட் வைத்தியசாலையிலுள்ள சாந்திகத்தின் அலுவலகம்.

-சாந்திகம் நிறுவனம்.

(C/14194)

## தும்பளையில் பரிசளிப்பு விழா

பருத்தித்துறை,டிசெ.8

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை காலை 8 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-7-118)

## கொழும்பு செல்லும் சாரணை வழிகாட்டுநருக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.8

கொழும்பு செல்வதற்காக பதிவு செய்த பெண் சாரண வழிகாட்டுநர்களை பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 7மணிக்கு யாழ்.ரயில் நிலையத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா,டிசெ.8

நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதடிப்பகுதியில் இடம்பெற்ற மோதல சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் ஈழவண்ணன் (பரராஜசிங்கம சாரங்கன் - யாழ்ப்பாணம்) உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (இ-7-164)

## மட்டக்களப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயங்கேணிப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டோர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சிப்பாய் உயிரிழந்தார்.

களுவாஞ்சிக்குடி மக்கள்வங்கிக கிளைக்கு அருகில் இடம்பெற்ற மற்றொரு தாக்குதல் சம்பவத்தில் விசேட அதிரடிப்படை சிப்பாய் காயமடைந்தார். (இ-7-21-8)

தென்மராட்சி.
பிறைற்றின் கல்வி நிலையம்
கோண்டாவில்
ஈசன் கல்வி நிலையத்தில்
புதிய கல்வியாண்டு 2001
தரம் 8, 9, 10, O/L வரையான வகுப்புகள்
ஆரம்பம்:
நாளை
09.12.2K
சனி 8.00 a.m.
(81389)

கலையகம்
உயர் கல்வி நிறுவனம்
ஆவரங்கால் - புத்தூர்
'ஓயாத அலைகள்' வரிசையில்
பிரபல ஆசிரியர் குழுவினால்
புதிய வகுப்புகள்
(3 - O/L, A/L)
ஆரம்பம்:09.12.2000
சனி - 3.30 (p.m.)
(81287)

## வைத்தியர்களுக்கு கொடுப்பனவு

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பணியாற்றும் வைத்தியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு, காப்புறுதி ஆகியவற்றை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்படி வைத்தியர்கள் ஒவ்வொருவரும் தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான காப்புறுதியைப் பெறுவர். இவர்களுக்குப் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ஜே.செனிவிரத்ன கூறினார்.(இ-8)

## பரீட்சை எழுத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உறவினர்களால் எடுத்து வரப்பட்டது. தவணைப்பரீட்சை எழுதச் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை உரும்பிராய்ச் சந்தியில் நேற்று நண்பகல் 12.15 மணியளவில் இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் நால்வர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் கே.பொன்னுத்துரை (வயது 64 - உரும்பிராய் மேற்கு), மரியதாஸன் கமல்ராஜ் (வயது 22 - உரும்பிராய் கிழக்கு), எஸ்.குமணன் (வயது 25 - ஊரெழு), இராசநாயகம் ரகு (வயது 25 - உரும்பிராய் கிழக்கு) ஆகியோரே காயமடைந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவனான எஸ்.குமணன் விபத்தில சிக்கியதனால் பல்கலைக் கழகத்தில நேற்று நடைபெற்ற பரீட்சைகளுக்கு சமுகம் அளிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

### ஆனைக்கோட்டையில்

ஆனைக்கோட்டைச் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குகநாதன் சிவனேசன் (வயது 22 - வட்டுக்கோட்டை) என்பவர் காயமடைந்தார்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்றுப் பகல் ஒரு மணியளவில் வீதியில் கால் நடையாக வந்து கொண்டிருந்த 70 வயது வயோதிப மாது ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயமடைந்தார்.

ஆனைக்கோட்டை ஆலய தொண்டரான கே.சீதாலட்சுமி என்பவரே இந்த விபத்தில் காயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் யாழ்போதனா வைத்தியசாலையில் விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### கரணவாயில்

கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்துக்கு முன்பாக நேற்று பிற்பகல் 4மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - லான்ட்மாஸ்டர் விபத்தில் மூவர் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாகர்கோயிலில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் வசிக்கும் பாலசிங்கம இராஜேஸ்வரி (வயது 24), அவரது பிள்ளைகளான நிரோசன (வயது 5), தபோச்ன் (வயது 3) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். (இ-3-5-6-15-117-133-139)

விண்ணப்பித்து விட்டீர்களா ?
DCS இன்
5000 புலமைப்பரிசில் திட்டத்திற்கு !
விண்ணப்பப்படிவங்களை குடாநாட்டிலுள்ள சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வீக்னா கல்வி நிறுவனம்
புதியஆண்டு 2001
O/L தொடக்கம் YEAR 6 வரை
தன்னிகரில்லா தனித்துவமான எம் ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| கணிதம் | -C.K.B.தயாளன் | திரு.விக்கி |
| விஞ்ஞானம் | -திரு.தேவா | திரு.பாபு |
| ஆங்கிலம் | -திரு.எஸ்.விஸ்வநாதன் | திரு.முகுந்தன் |
| தமிழ் | -திரு.தயாபரன் | செல்வி.கிருஸ்ணலதா |
| சமூகக்கல்வி | -திரு.அன்ரன் | திரு.றொபின்சன் |
| வரலாறு | -உங்கள் ஆசிரியர் | |
| சமயம் | -திரு.தரன் | |
| வர்த்தகம் | -திரு.கருணாகரன் | |

ஆரம்பம்: 09.12.2000 - 9.00 மணி
★ மாதாந்தப் பரீட்சைகளும் நடைபெறும்.
★ பாரினில் பல மேதைகளை உருவாக்கி சரித்திரம் படைத்த நிறுவனம்.
★ கடமை,கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
(81289)

28 வருட இணையற்ற சேவையினூடு உங்கள் சிறார்களின் உயர்ந்த எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ள ஓர் சந்தர்ப்பம்.........
THE EXPRESS INSTITUTE KOPAY A BOON TO STUDENTS
புதிய கல்வி ஆண்டில் (2001ல்)
புதிய வகுப்புகள்
தரம் 3 முதல் 11 வரை
புதிய அனுமதிகள்
மேலும் ஒரு நற்செய்தி டிசம்பர் 10 முதல்
நல்லூரில்..... எமது மேற்பார்வையில்!
தரம் 6 இற்கான விசேட பிரத்தியேக வகுப்பு
அனுபவம் முதிர்ந்த ஆசான்களால்
டிசம்பர் 15ல் ஆரம்பம்
புலமைப்பரிசில் பரீட்சையில் 100 இற்கு கூடிய புள்ளிகளைப் பெற்ற 15 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
பெயர் பதிவுகள் யாவும் தலைமை நிறுவனத்தில் (இருபாலையில்) மட்டுமே நடைபெறும்.
வகுப்புகள் நடைபெறும் இடம்
இல.51, செட்டித்தெரு, நல்லூர்
The Express Institute
Irupalai, Kopay.
-அதிபர்-
NANTHA Graphics(NG.)

NEW SCIENCE COLLEGE
இணைந்த கணிதம்
A/L 2002 தொடர்கள்
ஆரம்பம்: 10-12-2000 ஞாயிறு 8.00 a.m
A/L 2001 நேர்கோடு
ஆரம்பம்: 09-12-2000 சனி 10.00 a.m
A.பத்மநாதன்
(81301)

JAFFNA COLLEGE CEYLON
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
2001 இற்கான GAQ, 1st in Com.வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
2002 இற்கான புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பமாக இருக்கின்றன.
- இப் பட்டப் பாடநெறி வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய இரு இடங்களிலும் இடம்பெறும்.
- பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தால் செய்துதரப்படும்.
- மேலதிக விவரங்களுக்கு பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்.
பதிவாளர் :-
பட்டப்படிப்புகள் பிரிவு,
யாழ்ப்பாணக் கல்லூரி,
Jaffna Branch,
464, Hospital Rd.,
(வர்த்தக வங்கிக்கு அருகில்) Jaffna.
பதிவாளர்,
பட்டப்படிப்புகள் பிரிவு,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.
(C/14124)

BARATHY - சித்தன்கேணி
தரம் 6 தொடக்கம் 11 வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்: 09.12.2000 சனி 7.30 a.m.
எமது தனித்துவமும் திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

| | | | |
|---|---|---|---|
| விஞ்ஞானம் | :- திரு.தேவா<br>திரு.பாலச்சந்திரன் | தமிழ் | :- திரு.சின்னத்தம்பி<br>திரு.தவரட்ணம் |
| கணிதம் | :- திரு.எஸ்.சிவரூபன்<br>திரு.சிவா | சமூகக்கல்வி | :- திரு.ஜெகன்<br>திரு.சிவபாலன் |
| ஆங்கிலம் | :- திரு.விஜயபாஸ்கர்<br>திரு.வாகீசர்<br>திரு.அருமைநாயகம் | வர்த்தகம்<br>சமயம்<br>தமிழ் இலக்கியம் | :- திரு.லோகேஸ்வரன்<br>:- திரு.N.T.தரன்<br>:- திரு.சின்னத்தம்பி |

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
குறிப்பு:-
I. மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் சித்தன்கேணியில் வேறு எந்த கல்வி நிறுவனத்திலும் கற்பிக்கமாட்டார்கள்.
II. தரம் 9,10,11 இல் வகுப்புகளுக்கு 80 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
III. தரம் 6,7,8 இப்பிரிவுகளுக்கு இடநெருக்கடி காரணமாக 40 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
IV. வருடாவருடம் எமது நிறுவனத்தில் மணவர்கள் பெறும் அதிஉயர்ந்த பெறுபேறுகளே எமது ஆசிரியர்களின் திறமைகளை மேலும் உறுதிசெய்கின்றன.
(81319)

## மரண அறிவித்தல்

### விக்கினேஸ்வரன் திவ்யா

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த கந்தையா விக்கினேஸ்வரன் (C.T.B.) - கனகமலர் ஆகியோரின் அன்பு மகள் திவ்யா நேற்று (07-12-2000) வியாழக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் கோபி(கனடா), திலீபன்(உயர்தர மாணவன்.வயாவிளான் ம.ம.வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2000) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆனந்தன்
(சித்தப்பா-C.T.B)

*ஏழாலை கிழக்கு,*
*ஏழாலை.*

(C/14197)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.